Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 28 இதழ் - 1 ஜனவரி 2015

தனிப்பிரதி ரூ.10/-



உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன?
காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்பதைக்
கவனித்துப்பாருங்கள்.
அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை.
மத்தேயு 6:28

# திருமறை ஆசான்

## வாசகர்களின் கனிவான கவனத்திற்கு

எங்களது மாத இதழ் இந்த 2015-ம் ஆண்டிலும் தொடர்ந்து உங்களுக்கு வந்து சேர, கண்டிப்பாக எங்களைத் தொடர்பு கொண்டு உங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

தொடர்பு கொள்ளாதவர்களுக்கும், இந்த வருட சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கும் "திருமறை ஆசான்" இதழ் அனுப்புவது நிறுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களது இலக்கியப் பணிக்காகவும், ஊழிய காரியங்களுக்காகவும் உங்களது ஊக்கமான ஜெபம் எங்களுக்குத் தேவை. ஜெபியுங்கள்

**பெண்கள் சிறப்பு வகுப்பு**

நாள் :
29.1.2015 வியாழக்கிழமை
நேரம் : மாலை 4.00 மணி

இடம் : Plot 3309, LIG II TNHB,
7th மெயின் ரோடு, அயப்பாக்கம்,
சென்னை - 77

பேச்சாளர் : சகோதரி. **ரேச்சல் ராஜநாயகம்**

விபரங்களுக்கு : 90039 13017, 98418 67257, 72993 59927, 93831 51616

## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 1
2. ஏன் நாங்கள் கிறிஸ்தவர்களாக ... 9
3. பெண்கள் பகுதி 14
4. வாலிபர் பகுதி 18
5. சிறுவர் பகுதி 22
6. நம்பிக்கை ... 24
7. புத்தாண்டு தீர்மானம் ... 25
8. கிறிஸ்து என்னும் மார்க்கம்... 28


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 28 JANUARY - 2015 Issue - 1**


ஆசிரியர் உரை

# "நீங்கள்... இந்த வழியாய் நடந்து போகவில்லை"

"நாம் வாழும் இக்காலத்தில் பயணங்கள் பலவகை என்பதை நாமெல்லாரும் நன்கறிவோம். பயணங்களுக்காக மண்ணும், விண்ணும் மாத்திரமல்ல நீரும் பயன்படுத்தப்படுகிறது. இப்படி பயன்படுத்தப் பட்டாலும், இவைகளில் மிகப் பெரும்பாலோரால் பயன்படுத்தப் படுவது மண் மார்க்கமே. இந்த மண் மார்க்கத்தில் கூட பயண வகைகள் ஒரே மாதிரியாக இல்லாமல் விதவிதமான ஊர்திகள் பயன்பாட்டில் உள்ளன. இப்படி ஏராளமான ஊர்திகள் இருந்தாலும், தேவன் கொடுத்துள்ள "கால்களை"க் கொண்டு அங்குமிங்கும் நடந்து பயணிப்பது இன்னும் மானிடத்திற்குப் பொதுவானதாகவே உள்ளது. ஒருவேளை உலகளாவிய அளவில், நடந்து பயணிப்பது கிட்டதட்ட அற்றுப் போயிருந்தாலும், இந்தியா போன்ற வளரும் நாடுகளில் நடைப் பயணம் முற்றிலும் மறைந்து விட்டதென்று சொல்லிவிட முடியாது. எப்படியெனில் நம் தேசத்துக் கிராமங்களில், அடுத்த கிராமங்களுக்கும், பக்கத்திலுள்ள இடங்களுக்கும் கால்நடையாய் நடந்து செல்லும் வழக்கமும், பழக்கமும் இன்றளவும் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

அறிவியல் வளர்ச்சி அபாரமாகப் போய்க்கொண்டிருக்கும் இந்நாட்களிலேயே, நடந்து பயணிக்கும் வழக்கம் மறையாமல் இருக்கிற தென்றால், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக, அதாவது மோசேக்குப்

பின் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட யோசுவாவின் நாட்களில் இது எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். சொல்லப் போனால் ஒட்டுமொத்த ஜனங்களுக்கான ஏக பயணமாக நடைபயணம் மட்டுமே இருந்திருக்கும். ஒருவேளை அந்நாட்களில் ஆட்சிக் கட்டிலில் இருந்தவர்கள் இதற்கு விதிவிலக்காக இருந்து மற்றவகை பயணங்களை மேற்கொண்டிருந்திருக்கலாம்! அவ்வளவே. சரி, இக்கருத்தை உள் வாங்கினவர்களாக நாம் தொடர்ந்து பயணிப்போம்.

காலங்களையும், வருடங்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சர்வவல்ல தேவனுடைய பெரிதான கிருபையால் ஒரு புதிய ஆண்டுக்குள்ளாக அடியெடுத்து வைத்துப் பயணம் தொடங்கி சில வாரங்கள் ஆகிவிட்டது. நாம் கண்டிருக்கிற இப்புதிய ஆண்டு இதற்கு முன் நாம் கண்டு பயணித்திராத ஓர் ஆண்டு. நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வயதுக்கேற்ப பல ஆண்டுகளை நம் வாழ்க்கையில் இதற்கு முன்பாகக் கண்டு பயணித்திருந்தாலும், இப்புதிய ஆண்டு நாம் இதற்கு முன் பயணித்திராத ஒன்று. இந்த ஆண்டை வெற்றி கரமாகவும், ஆசீர்வாதமாகவும் முடிக்க வேண்டுமென்ற ஆசை நம் எல்லோருக்குமே இருக்கும். அதற்கான தேவ ஆலோசனைகள், "*இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்து போகவில்லை*" (யோசுவா 3:4) என்ற கூற்றிலிருந்து நமக்குக் கிடைக்க வாய்ப்பிருப்பதால், அதை அறிந்து கொள்ள பயணத்தை மேலும் தொடரலாம்.

அப்படித் தொடருவதற்கு முன் நமது வழக்கத்தின்படி இத்தலைப் பிற்கான பின்னணித் தகவல்களைத் தெரிந்து கொள்வோம்.

அக்காலம் தன்னிகரில்லாத் தலைவன் யோசுவாவின் நாட்கள். தன்னிகரில்லாத் தலைவன் என்று வார்த்தை விளையாட்டுக்காக நான் இங்கே குறிப்பிடவில்லை. தலைமையேற்று நடத்துவதற்கான அத்தனை தகுதிகளையும் தனக்குள்ளே கொண்டு, தலைமைப் பண்புகக்கான இலக்கணம் வகுத்தவன் இந்த யோசுவா என்று நாம் கண்ணை மூடிக் கொண்டு சொல்ல முடியும். அவ்வளவு தேர்ந்த தலைமை. எகிப்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பயணம் ஒரு வழியாக முடிவுக்கு வந்து யோசுவாவின் நாட்களில் நிறைவு கட்டத்தை நெருங்கும் நேரம் வந்துவிட்டது. நன்றி கெட்ட இஸ்ரவேல் ஜனங்களின் புண்ணியத்தால் 40 நாட்களில் கடக்க வேண்டிய தூரம் 40 ஆண்டுகளை எடுத்துக் கொண்டது (எண். 14:34). இப்படி அவர்கள் சுற்றி நடந்து, அலைந்து திரிந்த அப்பகுதி, நமது இந்திய தேசம் போன்று ஒரு பெரிய நிலப்பரப்பு அல்ல. சொல்லப்போனால், நம் தமிழகத்தின் நிலப்பரப்பைக் காட்டிலும் குறைந்த அளவிலான நிலப்பரப்பு அது. இக்குறுகிய பகுதியைத் தான் அவர்கள் 40 ஆண்டுகள் சுற்றிச் சுற்றி, ஆம், சுற்றிச் சுற்றி நடந்து திரிந்தார்கள்.

இதன் விளைவாக, இவர்கள் சுற்றி அலைந்த ஒட்டுமொத்தப் பகுதியும் இவர்களுக்கு மிகவும் பரிச்சயமான, பழக்கப்பட்ட பகுதியாக மாறிவிட்டது. ஆகவே இவர்கள் தங்கள் பிரயாணத்தில் எப்பகுதியைக் கடந்தாலும், எந்த வழியாகச் சென்றாலும் அது அவர்களுக்குப் புதிதான ஒன்றாகத் தெரிய வாய்ப்பில்லை. கண்களை மூடிக்கொண்டு நட என்று சொன்னால் கூட இவர்களால் அப்படியும் செய்திருக்க முடியும். ஏனென்றால், யோசுவா, காலேப் தவிர இவர்களெல்லாரும் வனாந்திரத்தில் பிறந்து வளர்ந்த இரண்டாம் தலைமுறை சந்ததியார். அப்படியானால், இவர்களுக்குச் சொல்லவா வேணும்! எதுவும் புதிதல்ல என்ற நினைப்பும், எந்த வழியும் எங்களுக்குப் பரிச்சயமானதே என்ற மமதையும் இவர்களுக்குத் தலைமேல் இருந்திருக்கும். இவர்களை அழைத்துக்கொண்டு தான் யோசுவா கானானுக்குள் செல்ல வேண்டும். அதற்கான பயனை ஆயத்தம் இப்பொழுது ஆரம்பமாகிறது. சித்தீமி லிருந்து தலைவன் யோசுவாவால் அனுப்பிப்பட்ட இரண்டு வேவுகாரர் களிடமிருந்தும், கர்த்தர் தேசத்தையெல்லாம் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார் (யோசுவா 2:24) என்ற சாதகச் செய்தியும் வந்தாயிற்று. அதிகாலமே எழுந்து யோசுவாவும், ஜனங்களும் சித்தீமிலிருந்து புறப் பட்டுப் பயணித்து யோர்தான் மட்டும் வந்து அங்கே இராத் தங்கினார்கள் (யோசுவா 3:1) மூன்று நாள் ஓய்வுக்குப் பின் ஜனங்களின் அதிபதிகள் பாளையம் எங்கும் போய் இப்படியாக அறிவித்தார்கள். *"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி யையும், அதைச் சுமக்கிற லேவியராகிய ஆசாரியர்களையும் கண்ட வுடனே, நீங்களும் உங்கள் இடத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு, அதற்குப் பின் செல்லுங்கள். உங்களுக்கும், அதற்கும் இடையே இரண்டாயிரம் முழத் தூரமான இடம் இருக்க வேண்டும். நீங்கள் நடக்க வேண்டிய வழியை அறியும்படிக்கு அதற்குச் சமீபமாய் வராதிருப்பீர்களாக. இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோகவில்லை என்று சொல்லிக் கட்டளையிட்டார்கள் " (யோசுவா 3:3,4)*

இஸ்ரவேல் ஜனங்கள் யோசுவாவும், அதிபதிகளும் கட்டளை யிட்டபடியே " ஒருபோதும் நடந்துபோகாத வழியிலே " வெற்றிகரமாகப் பயணித்து, கானானை சுதந்தரித்து, தங்களுக்கான காணியாட்சியை ஆசீர்வாதமாகப் பெற்று அந்த வருடத்திலே தேசத்தின் தானியத்தைப் புசித்தார்கள் என்று நாம் பார்க்கிறோம் (யோசுவா 4:1; 5:12) ஒரு காலத்தில் அடிமையாகளாய் அல்லல்பட்டு வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்கள், இந்த மகத்தான ஆசீர்வாதத்தை அனுபவிப்பதற்குத் தங்கள் பங்கில் செய்ய வேண்டிய காரியங்கள் இருந்தன. அவைகளைச் செய்தபடியால் தான் இந்த உன்னத நிலைக்கு அவர்களால் தங்களை உயர்த்திக்கொள்ள முடிந்தது.

ஆகவே, முன் ஒருபோதும் பயணித்திராத இப்புதிய ஆண்டிற்குள் ளாகப் பிரவேசித்திருக்கும் நாம் இவ்வாண்டிற்கான சகல நன்மைகளையும்

அறுவடை செய்வதற்கு அதே வழிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம். இச்சிந்தையோடு அவைகளில் சிலவற்றை இங்கே கவனிப்போம்.

## I. தேவனுடைய வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது

ஒருபோதும் நடந்து போகாத வழியில் வெற்றியாகப் பயணித்து கானானைச் சுதந்தரிப்பதற்கு யோசுவா செய்தமுதல் காரியமாக, அதிகாலமே எழுந்து தேவனுடைய வார்த்தைகளைத் தேடினதைச் சொல்லலாம்.

அறுப்புக் காலம் முழுவதும் கரைபுரண்டு ஓடும் யோர்தானைக் கடக்கும்படியான கட்டம் வந்தபோதும் கடினமான யோர்தானைக் கடந்து கானானனைச் சுதந்தரிக்கும் நாட்களிலும் யோசுவா செய்த காரியம் அதிகாலமே எழுந்திருப்பது (யோசுவா *3:1; 6:15; 7:16*). எதற்காக யோசுவா அதிகாலையிலே எழுந்திருந்திருப்பார்? சூரிய நமஸ்காரம் செய்வதற்கா? காலை வேளையின் அழகைக் கண்டு ரசிப்பதற்கா? நடைப் பயிற்சி செய்வதற்கா? அல்லது கால்நடைகளின் கட்டுத்தாரையில் வேலை செய்வதற்கா? எதற்காக இருந்திருக்கும். தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் யோசுவாவுக்குக் கொடுக்கப்பட்ட முதல் கட்டளைகளில் ஒன்று, " இந்த நியாயப் பிரமாணப் புத்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக " என்பது (யோசுவா *1:8*).

எனவே, யோசுவா இக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவராகவே தன் தேவப் பணியைச் செய்திருப்பார். அதுவும் ஒரு முக்கியமான கால கட்டத்தில் தேவ ஆலோசனையை அவருடைய வார்த்தைகளிலிருந்து தேடாமல் இருந்திருக்கமாட்டார். ஆக, அவர் அதிகாலையில் எழுந்தது, தேவனுடைய ஆலோசனையை அவருடைய வார்த்தைகளிலிருந்து தேடும்படியாகத் தானிருக்க வேண்டும். தான் இப்படித் தேடினது மாத்திரமல்ல, இஸ்ரவேல் புத்திரரை நோக்கி; " *நீங்கள் இங்கே சேர்ந்து உங்கள் தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள்* " என்றான் (யோசுவா *3:9*) தானும் தேவனுடைய வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் தந்து, ஜனங்களையும் தேவ வார்த்தைகளின்படி நடக்கச் செய்ததன் மூலம் மிரட்டின யோர்தான் மிரண்டு வழிவிட்டது. ஜனங்கள் முன்னெப் போதும் நடந்திராத வழியில் சுகமாகப் பயணித்து வாக்குத்தத்த பூமியை பாடுகளினின்றி அடைந்தார்கள்.

புதிய ஆண்டுக்குள்ளான பயணம் சுகமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்களே, நம்மில் எத்தனைபேர் யோசுவா போலும், யோசுவாவின் நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்கள் போலும் தேவனுடைய வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்?

தேவனுடைய வார்த்தைகள் என்று சொல்லும் போது அது பல கட்டங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஆம், வாசிப்பு, தியானிப்பு, ஆராய்ச்சி என்று குறைநத்து மூன்று நிலைகள் மறுபடியும் கேட்கிறேன் நம்மில் எத்தனை பேருக்கு இப்பழக்கம் உள்ளது? அதுவும், அதிகாலையில் எழுந்து நம்மில் எத்தனை பேர் இப்படிச் செய்கிறவர்களாக உள்ளோம்? கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள் என்று சொல்லுகிற வேதாகமம் (ஏசாயா 53:6) அத்தோடு நிறுத்தாமல், "*அதிகாலையில் அவரைத் தேடுகிறவர்கள் கண்டடைவார்கள்* " (நீதி. 8:17) என்றும் கூறுவதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அதிகாலையில் எழுந்து தேவனுடைய வாக்கியங்களைத் தியானிப்பவர்களாக இருந்தால் நாம் பாக்கியவான்களாகவும், நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட நாற்றைப்போல் செழிப்புள்ளவர்களாகவும், அநேக ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் இருக்க முடியும் (சங். 1) தியானிப்பவர்களாக மாத்திரமல்ல. அத்தோடு வேத வாக்கியங்களை ஆராய்கிறவர்களாக இருந்தால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ள நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்ள முடியும் (1 யோவான் 2:25; யோவான் 5:39).

ஆகையால், அருமையானவர்களே! முன் கண்டிராத இப்புதிய ஆண்டுக்குள்ளாக ஒருவித தயக்கத்தோடும், லேசான கலக்கத்தோடும் பிரவேசித்திருக்கிற நாம், கரைபுரண்டு ஓடும் யோர்தான் போன்று எதிர்வரும் எல்லாத் தடைகளையும் இவ்வாண்டில் பயமின்றிக் கடந்து, தமக்குப் பயப்படுகிறவர்களுக்குத் தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ள சகல ஆசீர்வாதங்களையும் சுதந்தரிப்பதற்கு நம் வாழ்வில் தேவனுடைய வார்த்தைகளுக்கு முதலிடம் கொடுத்து அதின்படி மாத்திரம் செய்கிறவர்களாக இருப்போம்.

## II. உடன்படிக்கைப் பெட்டி கவனிக்கப்பட்டு பின்பற்றப்பட்டது

ஒருபோதும் நடந்து போகாத வழியில் வெற்றியாகப் பயணித்துக் கானானனைச் சுதந்தரிப்பதற்குச் செய்யப்பட்ட இரண்டாவது காரியமாக தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியானது கவனித்துப் பின்பற்றப்பட்டதைக் கூறலாம்.

அதிகாலமே எழுந்து ஆயத்தமாகி ஜனங்களை சித்தீமிலிருந்து யோர்தானுக்கு அழைத்துச் சென்ற யோசுவா, பாளையம் எங்கும் சென்று ஆயத்தச் செய்தியை அறிவிக்கும்படியான பொறுப்பை அதிபதிகளிடம் கொடுத்தார். "*அதிபதிகள் ஜனங்களை நோக்கி; நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் அதைச் சுமக்கிற லேவியராகிய ஆசாரியர்களையும் கண்டவுடனே, நீங்களும் உங்கள் இடத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு, அதற்குப் பின் செல்லுங்கள், உங்களுக்கும் அதற்கும் இடையிலே இரண்டாயிரம் முழத்தூரமான*

*இடம் இருக்க வேண்டும். நீங்கள் நடக்க வேண்டிய வழியை அறியும் படிக்கு, அதற்குச் சமீபமாய் வராதிருப்பீர் களாக, இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்து போகவில்லை என்று சொல்லிக் கட்டளையிட்டார்கள்* " (யோசுவா 3:3,4).

இந்த அதிபதிகளின் கட்டளையைப் பார்க்கும் போது ஓர் உண்மை தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. யோர்தானைக் கடப்ப தற்கும், கானானில் பிரவேசிக்கும்படியான வழியை அறிவதற்கும் உடன் படிக்கைப் பெட்டியின் மீது கண்ணைப் பதித்து அதைப் பின்பற்ற வேண்டுமென்பதே அவ்வுண்மை. ஜனங்களுக்கும், உடன்படிக்கைப் பெட்டிக்குமிடையே இரண்டாயிரம் முழத்தூரம். அதாவது, நம் கணக்கில் 1 கி.மீ. தூரம் இருக்க வேண்டுமென்பது சில நோக்கங் களோடு தான் சொல்லப்பட்டிருக்க வேண்டும். முதலாவது நோக்கம், தேவ காரியங்களில் ஜனங்களுக்கு ஒரு பயம் இருக்க வேண்டுமென்பது. இரண்டாவது நோக்கம், லட்சக்கணக்கில் ஜனங்கள் சென்றதால், ஜனங் களுக்கு மத்தியில் உடன்படிக்கைப்பெட்டி இருந்திருக்கும் போது பின்னால் வருபவர்களுக்கு பெட்டி எங்கிருக்கிறதென்பது தெரியாமல் பாதை மாறிப் போக வாய்ப்புண்டு. அதைத் தவிர்ப்பதற்காகவும் இந்த இடைவெளி தேவைப்பட்டிருக்க வேண்டும். தன் காரியத்தில் ஜனங் களுக்குப் பயம் இருக்க வேண்டுமென்பதிலும், தன் ஜனங்கள் வழி தவறிப் போய்விடக்கூடாது என்பதிலும் நம் தேவன் எவ்வளவு கவனமா யிருக்கிறாரென்று பாருங்கள். ஆகவே தான், இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும், நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது? (உபாகமம் 4:8) என்று வியந்து மோசே தாசன் எழுதியுள்ளார்.

அன்பானவர்களே, அன்றைக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சரீர கானானுக்குள் பிரவேசிப்பதற்கு, நோக்கிப் பார்ப்பதும், வழியை அறிந்து பயணிப்பதும் அவசியமானால், பரம கானானுக்குள் பிரவேசிக்க இவ்விரண்டும் அவசியமில்லாமல் போய்விடுமா? அன்றைக்கு உடன் படிக்கைப் பெட்டியை நோக்கிப் பார்ப்பது அவசியமாயிருந்தது போல, இன்றைக்கும் நாம் இயேசுவை நோக்கிப் பார்ப்பது அவசியமாயிருக் கிறது. இவ்வுண்மையை எபிரெயர் ஆசிரியர் எங்ஙனம் கூறுகிறார் பாருங்கள். "*ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்கு கிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித் திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்* " (எபி. 12:1).

அன்றைக்கு உடன்படிக்கைப் பெட்டியை நோக்குவது மாத்திரம் எப்படிப் போதாதோ, அதுபோல இந்நாட்களில் வெறுமனே இயேசுவின் காரியங்களை நோக்கிப் பார்ப்பதோ இயேசு, இயேசு என்று சொல்வதோ போதாது. இயேசு காட்டியுள்ள சத்திய வழியிலும் (யோவான் 14:6) இயேசு தந்துள்ள உபதேச வழியிலும் (யோவான் 14:6; 12:48) நாம் பிசகாமல் சென்றாக வேண்டும்.

அப்படியானால், நம் பக்திப் பயணம் இவ்விதமாக உள்ளதா? நம்மை நாமே நிதானித்துப் பார்ப்போம். முன்னெப்போதும் போகாத வழியாக நம் பக்திப் பயணம் அமைந்திருந்தாலும், இங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ள கோட்பாடுகளைப் பின்பற்றினால், அது பாதுகாப்பான பயணமாக அமைந்து நம்மைப் பரலோகக் கானானுக்கு அழைத்துச் செல்லும்.

## III. தேவ வழி நடத்துதல் நம்பி ஏற்றுக்கொள்ளப்பட்டது

ஒருபோதும் நடந்து போகாத வழியில் வெற்றியாகப் பயணித்துக் கானானைச் சுதந்தரிப்பதற்குச் செய்யப்பட்ட மூன்றாவது தேவ மனிதர்களின் பேச்சு மதித்து ஏற்றுக்கொள்ளப்பட்டதைக் கூறலாம்.

இங்கே ஓர் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். யோர்தான் அருகே காத்துக் கிடந்த இந்த ஜனங்கள், இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள். அதாவது, எகிப்திலிருந்து விடுதலையாகி வந்த போது, செங்கடல் பிளந்து வழிவிட்டதும், வெட்டாந்தரையில் நடப்பதுபோல் நடந்து வந்ததும் இவர்களுக்குத் தெரியாது. அந்த அனுபவம் இவர்களுக்கு இல்லை. அங்கே எல்லாமே புதிது, யோர்தான் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கிறது (3:15). நிச்சயமாகப் பலவிதப் பயங்கள் அவர்களுக்கு இருந்திருக்கும். தங்கள் உயிரைப் பற்றி, மனைவி மக்களின் உயிர்கள் பற்றி, தங்கள் கால்நடைகளின் பாதுகாப்பு பற்றி, போகப் போகும் தேசத்தில் எதிர்கொள்ள வேண்டிய சாவல்கள் பற்றி என்று பல பயங்கள் இருந்திருக்கும். ஆனாலும், வசனம் சொல்லுகிறது. " ஜனங்கள் யோர் தானைக் கடந்து போகத் தங்கள் கூடாரங்களிலிருந்து புறப்பட்டார்கள்" (யோசுவா 3:14) என்று. ஆம், எதைப் பற்றியும் அவர்கள் அங்கே கவலைப்படவில்லை.

இது எப்படி சாத்தியம் என்று திகைக்கிறீர்களா? நீங்கள் தேவன் மீது விசுவாசமும், தேவ வழிநடத்துதலில் நம்பிக்கையும் உடையவர்களாயிருந்தால் இங்கே திகைப்பதற்கு ஒன்றுமேயில்லை. ஈசாக்கைப் பலி செலுத்தும்படி ஆபிரகாம் சென்ற போது, ஆபிரகாம் ஈசாக்கின் கேள்விக்குக் கொடுத்த பதில் தான் என் நினைவுக்கு வருகிறது. " இதோ, நெருப்பும், கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி


எங்கே " என்று கேட்டபோது (ஆதி. 22:7). " தேவன் தமக்குத் தகன பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார் " (22:87) என்பது தான். அவ்வளவுவே அந்த இரண்டாம் சந்ததி ஜனங்களின் நிலைப் பாடு என்ன? " தேவன், யோசுவா மூலமாகவும், அதிபதிகள் மூலமாகவும் பேசுகிறார். அவர்கள் தேவ மனிதர்கள். நாங்கள் கீழ்ப்படிகிறோம் என்பது தான் ". இங்கே ஒன்றை கவனிக்கத் தவறிவிடாதீர்கள். யோசுவா போன்ற உண்மையான தேவ மனிதர்களின் வார்த்தைகளுக்கு மட்டுமே நாம் நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும். தேவ மனிதர்கள் என்கிற போர்வையைப் போர்த்துக் கொண்டு திரிகிற ஏராளமான ஓநாய்களுக்கு நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது அவசியம்.

அருமையானவர்களே, யோசுவா காலத்து ஜனங்கள் போல, ஒருபோதும் நடந்து செல்லாத இப்புதிய ஆண்டிற்குள்ளாக அடியெடுத்து வைத்திருக்கும் நாம், தேவ வழிநடத்துதலில் நம்பிக்கை வைத்துச் செயல்படத் தயாரா? செல்லுங்கள். நாம் கடந்து செல்லும் பாதையோ அல்லது வருடமோ நமக்குப் புதியதாக, நாம் பார்த்திராத நமக்குப் பழக்கமில்லாத ஒன்றாக இருக்கலாம். ஆனால், சர்வவல்ல, சர்வ ஞான சர்வ வியாபியான தேவனுக்கு அப்படியில்லையே. எல்லாமே அவருக்கு அத்துபடிதானே! பிறகெதற்குத் தயக்கம், பயம், கலக்கம்? சொல்லுங்கள். நமக்குப் புத்தம் புதிதாகத் தெரிபவைகள். தேவாதி தேவனுக்கு சுத்தப் பழசுகளே! அப்புறம் என்ன? யோசுவா காலத்து ஜனங்கள் போல கடந்து போக புறப்பட வேண்டியது தானே!

ஆகையால், நாம் கண்டு, பிரவேசித்துச் சில வாரங்களே ஆன இந்த ஆண்டின் எஞ்சியுள்ள வாரங்கள் மற்றும் மாதங்களைக் குறித்து, முன் ஒரு போதும் கடந்து போகாத ஆண்டாக இருக்கிறதே, எப்படி யிருக்குமோ, எதை வைத்திருக்கிறதோ, என்ன நடக்குமோ என்று கவலைப்படாமல், தேவனுடைய வார்த்தைகளுக்கும், உண்மையாகச் சத்தியத்தைப் போதிக்கும் தேவ மனிதர்களின் சொல்லுக்கும் முக்கியத்துவம் கொடுத்து இயேசுவை நோக்கி, அவர் காட்டியுள்ள புதிய ஏற்பாட்டு உபதேச வழியில் நடந்து, புதிய ஏற்பாடு சொல்லும் ஒன்றான மெய் சபையாகிய கிறிஸ்துவின் சபையை அடையாளம் கண்டு, விசுவாசித்து (மாற்கு 16:16) மனந்திரும்பி (லூக்கா 13:3). அறிக்கை யிட்டு (அப். 8:37). பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16) கிறிஸ்துவாலே அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு (அப். 2:47) வாழ்வோமாக!

இதன் மூலம் நாம், யோர்தான் போன்ற உலகக் கவலைகளைக் கடந்து, பரமக்கானானை நம்பிக்கையோடு சுதந்தரிக்க முடியும். இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தைப் இப்புதிய ஆண்டிலே தேவன் நமக்குத் தந்தருளுவாராக! ஆமென்!!

# ஏன் நாங்கள் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம்?



**Bro. J.C. சோட்**

**நீ**ங்கள் அறிந்திருக்கிறபடி உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் தாங்களும் கிறிஸ்துவை விசுவாசிப்பதாக சொல்லிக் கொண்டு, அதேநேரத்தில், அவருடைய பெயரைத் தரித்துக் கொள்ளாமலிருக்கிறார்கள். கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் மனிதர்களுடைய பெயர்களை, அவரவர் உபதேசங்கள் அல்லது கொள்கைகளின் பெயர்களை அல்லது வாரத்தில் ஏதோ ஒரு நாளின் பெயரை தரித்துக் கொள்கிறார்கள். இது வேதாகம உபதேசத்திற்கு எதிரானது என்று நாங்கள் நம்புகிறோம். அதே நேரத்தில், உலகம் முழுவதிலும் எங்களைப் போன்ற லட்சக்கணக்கான மக்கள் மனித உபதேசத்தை நிராகரிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். நாங்கள் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்த போது அது எங்களை கிறிஸ்தவர்களாக, கிறிஸ்தவர்களாக மாத்திரம் ஆக்கியது.

நாம் தேவனுடைய வார்த்தைக்குச் செல்லும் போது, இரட்சிப்பு கிறிஸ்துவின் நாமத்தில் தான் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் இப்படியாக வாசிக்கிறோம், *"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை "* என்று (அப். 4:12). உண்மைதான், இன்று உலகில் மிகப்பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதற்காகவும், என்னவாயிருக்கிறார்கள் என்பதற்காகவும் அவர்களைப் பாராட்டுகிறோம், அவர்களுக்கு மரியாதை கொடுக்கிறோம். மிகப்பெரிய மனிதர்கள் எப்போதுமே இருந்து வருகிறார்கள். காலம் உள்ளவரை பெரிய மனிதர்கள் தொடர்ந்து இருப்பார்கள். எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், ஒரு மனிதனுடைய பெயரைத் தரித்துக் கொண்டு நாம் அவரைக் கனப்படுத்தும் அளவுக்கு ஒரு பெரிய மனிதர் அல்லது முக்கியமான மனிதர் அல்லது மகத்தான மனிதர் என்று யாருமில்லை. ஏனென்றால், எந்த ஒரு மனிதனாலும் நம்மை இரட்சிக்க முடியாது. கிறிஸ்து மாத்திரமே நம்மை இரட்சிக்க முடியும். அவர் நம் இரட்சகராயிருக்கிறார் என்பதற்கு அத்தாட்சியாக, அவர் நாமத்தை மாத்திரம் நாம் தரித்துக் கொள்கிறோம்.

நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என அறிக்கை

செய்து, நம் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறும் போது, அவர் நம்மை இரட்சித்து, தம்முடைய சபையில் நம்மை சேர்க்கிறார். எனவே, நாம் அவருடையவர்கள். அவர் நம் உரிமையாளர் என்பதை அறிவிக்கும் விதத்தில் நாம் அவருடைய பெயரைத் தரித்துக் கொள்கிறோம். கிறிஸ்து இப்படிச் சொன்னார், *"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"* என்று (மாற்கு 16:16).

அதன் பின்பு, ஒரு கூட்ட மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப் 2:41). இதன் விளைவாக, *"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்"* என்று அப்போஸ் தலர் 2:47-ல் நாம் வாசிக்கிறோம். ஆனால், அவர்கள் யாருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள்? கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்பட்டார்கள். கிறிஸ்து தம்முடைய சபையைக் கட்டுவதாகச் சொல்லியிருந்தார் (மத்தேயு 16:18), அது தான் இந்த சபை. மறுபடியும், நாம் அப். 20:28-ல், கிறிஸ்து தம்முடைய இரத்தத்தினாலே சபையை வாங்கினார் என்று வாசிக்கிறோம். அதாவது, ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட அவசியமான கிரயத்தை அவர் செலுத்தினார். அப்படி இரட்சிக்கப் பட்டவர்களனைவரையும் கொண்டது தான் சபை. எபேசியர் 5:23-ல், பவுல், கிறிஸ்துவானவர் சபை அல்லது சரீரத்திற்கு இரட்சகராயிருக் கிறார் என்று சொல்கிறார். இவைகளெல்லாம் இரட்சிக்கப்பட்டவர் களும், சபையில் சேர்க்கப்பட்டவர்களும் கிறிஸ்துவுக்குச் சொந்தமான வர்கள் என்று சொல்கிறது. ஏனெனில், கிறிஸ்து தான் சபைக்கு இரட்ச கராக இருக்கிறார். இதன் பொருள், நாம் கிறிஸ்துவுக்குச் சொந்த மானவர்கள் என்பதைக் காட்ட தனிநபராகவும், சபையாகவும் கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்ள வேண்டும். நாம் அவருக்குச் சொந்தமானவர்களாக இல்லையானால், அவருடைய நாமத்தை தரித்துக் கொள்ளும் உரிமை நமக்கு இயல்பாகவே இருக்காது. நாம் மற்றவர்களுடைய பெயர்களைத் தரித்துக் கொண்டால், நாம் கிறிஸ்து வினுடையவர்கள் அல்ல என்பதையே காட்டுகிறது. ஏதாவது ஒன்று என்னுடையதானால், அது என் பெயரில் தான் இருக்க வேண்டும்.

எனக்கு ஏதாவது செல்வமோ, வீடோ இருந்தால் அது என் பெயரில் பதிவு செய்யப்படுகிறது. எனக்கு ஒரு மனைவி இருந்தால் என் பெயரை தரித்துக் கொள்வதால் என்னை கனப்படுத்துகிறாள். எனக்கு பிள்ளைகள் இருந்தால், என் பெயரை தரித்துக்கொண்டு நான் அவர் களுடைய தகப்பன் என அடையாளப்படுத்துகிறார்கள். மாறாக, என்னு டையவைகள் எல்லாம் மற்றவர்களுடைய பெயரில் இருந்தால் சம்மந்தப்பட்டவைகள் என்னுடையவைகள் என்பதை நான் எப்படி

நிரூபிக்க முடியும்? இக்கருத்து கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவைப் பின்பற்று கிறவர்களுக்கும் அப்படியே பொருந்தும். இதனால் தான், நாங்கள் கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருக்கிறோம், மற்றும் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம்.

கிறிஸ்தவன் என்கிற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மூன்று முறைகள் காணப்படுகிறது. அவைகளில் முதலாவது, அப்போஸ்தலர் **11:26**-ல் உள்ளது. *"...முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்த வர்கள் என்கிற பேர் வழங்கிற்று "*. அதற்கு முன்பாக, அவர்கள் எப்படி இருந்தார்கள்? அவர்கள் கிறிஸ்தவர்களாக, இயேசுவைப் பின்பற்றினவர் களாகத்தான் இருந்தார்கள். ஆனால், கர்த்தருடைய ஜனங்கள், முதல் முதல் அந்தியோகியாவில் தான் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட் டார்கள். அடுத்ததாக, கிறிஸ்தவன் என்கின்ற பெயர் அப்போஸ்தலர் **26:28**-ல் இடம் பெற்றிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் பவுல் அகிரிப்பா ராஜாவுக்கு போதித்துக் கொண்டும், அவருடைய விசுவாசத்தைக் குறித்து கேள்விகேட்டுக் கொண்டும் இருந்தார். பின்பு, நாம் இப்படியாக வாசிக்கிறோம். *"அப்போது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்த வனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான் "*. சிலர், அந்த ராஜா, கிறிஸ்தவனாகுதல் என்கிற கருத்தைக் குறித்து கேலி செய்ததாகச் சொல்கிறார்கள். அந்த ராஜா உண்மையாகச் சொன்னானோ இல்லையோ, நமக்குத் தெரியாது. ஆனால், கிறிஸ்தவன் என்கிற பெயரைக் குறித்து கொஞ்சம் அவன் அறிந்திருந்தான். ஒரு வேளை, பவுலை சந்திப்பதற்கு முன்பே கிறிஸ்தவம் பற்றி அதிகமாக இவன் கேள்விப்பட்டிருக்கலாம். உண்மையில், பவுல், அப்போது காவலில் இருந்தார், அவர் சென்ற இடமெல்லாம் கிறிஸ்துவை பிரசங் கித்ததற்காக கைது செய்யப்பட்டுராயனால் விசாரிக்கப்படும்படி ரோமாபுரிக்கு அனுப்பப்படும்படி இருந்தார். ஒரு வேளை, அகிரிப்பா ராஜாவுக்கு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைப் பற்றிய பரிச்சயம் இருந்திருக்கலாம். அப்படி இல்லையென்றால் கூட, நிச்சய மாகவே பவுல் அவரிடத்தில் கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்தவனா வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் சொல்லியிருப்பார். அந்நாட்களில் கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டார்கள் என்கின்ற முடிவுக்கு வரலாம். அப்போஸ்தலனாகிய பேதுரு இது பற்றிச் சொல்லும்போது, *" ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் "* என்று சொல்கிறார் (I பேதுரு **4:16**). இங்கே பேதுரு, பாவத்தின் காரணமாக ஒருவன் பாடுகள் படுவதற்கும், கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுகள் படுவதற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறார். ஒருவன் கெட்ட அல்லது தவறான காரியம் செய்வதினால் பாடுபடுவது அந்த நபருக்கு அவமானம். அதே நேரத்தில்,

ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால், அவன் அது குறித்து வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை.

யார் கிறிஸ்தவன்? கிறிஸ்துவைப் பின்பற்றுபவன், கிறிஸ்துவைப் போல இருப்பவன். அவன் தேவபக்தியுள்ளவன், நேர்மையானவன், எப்போதும் சரியானதைச் செய்ய முயற்சி செய்கிறவன். இதில் என்ன தவறு இருக்கிறது? ஒன்றுமில்லை. எனவே, ஒருவன் கிறிஸ்தவனாயிருப் பதினால் பாடுபட்டால் அதைக் குறித்து வெட்கப்படாமலிருந்து, அவரு டைய நாமத்துக்காக அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணி, அதை ஒரு வாய்ப்பாகக் கருதி கனி தர வேண்டும். யாக்கோபு 2:7 ஐ வாசியுங்கள் *" உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர் களல்லவோ தூஷிக்கிறார்கள் "*. இங்கே யாக்கோபு, கிறிஸ்தவர் என்கிற பெயரைக் குறிப்பிடவில்லையென்றாலும் கிறிஸ்துவின் பகைஞர்கள் சம்மந்தமாக பேசும்போது, நல்ல நாமம் என்பது கிறிஸ்தவன் என்கிற நாமத்தைக் குறிக்கும் விதத்திலேயே பேசியிருக்கிறார். தேவ ஆவியினால் ஏவப்பட்ட இந்த எழுத்தாளர், தேவனுடைய பிள்ளைகள் எந்த நாமத்தி னாலே அழைக்கப்பட்டார்களோ அந்த நாமத்தைப் பற்றி தான் பேசுகிறார். கிறிஸ்துவின் நாமத்தைக் காட்டிலும், கிறிஸ்தவன் என்கிற நாமத்தைக் காட்டிலும் எந்த ஒரு பெரிய நாமத்தை அவர்கள் தரித்துக் கொண்டி ருக்க முடியும்? ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதால் மாத்திரம் கிறிஸ்தவன் என்று அழைக்கப்படாமல், அவன் தன் வாழ்க்கையின் மூலம், தான் ஒரு கிறிஸ்தவன் என்று காட்ட வேண்டும். எனவே தான், பவுல் தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதினார். *"வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத் தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் " (கொலோ. 3:17)* என்று.

வேதாகமம் என்ன போதிக்கிறதோ அதனடிப்படையில் நாம் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கிறோம். ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது கிறிஸ்து அவரை இரட்சிக்கிறார். எனவே, அவர் கிறிஸ்துவினுடையவராகிறார் என்று வேதவாக்கியம் நமக்குச் சொல்கிறது. இப்படியாக, அவர், தான் யாருடையவர், தன் உரிமையாளர் யார் என்பதைக் காட்டுவதற்காக கிறிஸ்தவன் என்கிற பெயரைத் தரித்துக் கொள்கிறார். ஒருவர் வேறொரு வரின் பெயரைத் தரித்துக் கொண்டு, இப்படிப்பட்ட உரிமைத்துவத்தை எப்படிக் காட்ட முடியும்? ஒருவர் மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயரைத் தரித்துக் கொண்டு கிறிஸ்துவின் நாமத்தை எப்படிக் கனப்படுத்த முடியும்?

நாங்கள் கிறிஸ்துவை மாத்திரம் பின்பற்றுகிறபடியால், கிறிஸ்த வர்களாக மாத்திரம் இருக்கிறோம். கிறிஸ்து நம்முடைய கர்த்தராகவும்,

எஜமானாகவும் இருக்கிறார். அவரிடம் வருவதற்கு எங்களுக்கு நற்செய்தியின் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது (மத்தேயு 11:28-30) நாங்கள் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டோம். அவர் தம்மீது விசுவாசம் வைத்து, அவருக்குக் கீழ்ப்படியும்படி கட்டளையிட்டார். நாங்களும் அப்படியே செய்தோம் (மாற்கு 16:15,16).

சபையாகிய அவருடைய குடும்பத்தில் நாங்கள் அங்கத்தினர்களாக இருப்பதால் நாங்கள் கிறிஸ்தவர்களாக மட்டும் இருக்கிறோம். அவருடைய குடும்ப அங்கத்தினர்களாக நாங்கள் இருக்கிறபடியால் குடும்பப் பெயரை நாங்கள் தரித்துக் கொண்டிருக்கிறோம் (எபே. 3:14, 15).

நாங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவித்துக் கொண்டிருக்கிறபடியால் நாங்கள் கிறிஸ்தவர்களாக மட்டும் இருக்கிறோம். வாரத்தின் முதல் நாள்தோறும் ஆராதனைக்காக நாங்கள் கூடுகிறோம் (அப். 20:7), கிறிஸ்துவைப் பின்பற்ற அனுதினமும் பாடுபடுகிறோம் (லூக்கா 9:23)

இப்போது நான் உங்களை ஒன்று கேட்கட்டும். கிறிஸ்துவில் நீங்கள் ஒரு விசுவாசியா? நீங்கள் வேதத்தில் வாசிக்க முடியாத சபையில் அங்கத்தினராக இருந்தாலோ, அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயரைத் தரித்திருந்தாலோ அல்லது உங்களை ஒரு கிறிஸ்தவன் எனச் சொல்லிக்கொள்வதாலோ நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியாது. நீங்கள் கிறிஸ்வராக இருந்தால் உங்களால் தேவனுடைய வார்த்தைக்குச் சென்று, நீங்கள் கிறிஸ்தவராக மாறினதற்கு என்ன செய்தீர்கள் என்பதையும், நீங்கள் ஏன் கிறிஸ்தவரானீர்கள் என்பதற்குமான காரணங்களைக் காட்டமுடியும்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால், கிறிஸ்தவராகும்படி உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும் போது, அப்போது கர்த்தர் உங்களை இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப். 2:38,47). கர்த்தருடைய குடும்பமாகிய சபையில் நீங்கள் அங்கத்தினராக இருக்கும் போது நீங்கள் கிறிஸ்தவனாயிருப்பீர்கள். இது செய்வதற்கு மிகவும் சுலபமானது. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பேதுரு, பவுல், யோவானைப் போன்று நீங்களும் ஒரு கிறிஸ்தவன் என்பது எவ்வளவு திருப்திகரமானதாக இருக்கும்! அவர்களால் கிறிஸ்தவர்களாக மட்டும் இருந்திருக்க முடியுமென்றால், உங்களாலும் கிறிஸ்தவனாக மட்டும் இருக்க முடியும். இதற்கு மாறாக, கூடுதலாகவும், குறைவாகவும் ஏன் இருக்க வேண்டும்? கர்த்தர் நீங்கள் எப்படி இருக்க விரும்புகிறாரோ அப்படி மட்டும் இருங்கள். அது போதுமானது.

பெண்கள் பகுதி

# நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

**Sis. R. R. NAYAGAM**

கிறிஸ்துவுக்குள் அன்பும், பிரியமுமான சகோதரிகளே! இம்மாதமும் நாம் அனைவரும் சேர்ந்து கர்த்தருடைய வார்த்தைகளை ஆராய்ந்து கொள்ள அவர் கொடுத்த சிலாக்கியத்துக்காக கோடான கோடி நன்றி களை ஏறெடுத்துக்கொள்வோம்.

ஏசாயா 6:8 ல், பின்பு, யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான், இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன் என்ற வசனப்பகுதியை வாசிக்கிறோம். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் அவருக்காக பற்பல முக்கியமான வேலைகளைச் செய்வதற்காக சுவிசேஷத்தால் அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவன், இதைச் செய், அதைச் செய் என்று நம்மை கட்டாயப்படுத்தமாட்டார். ஆனால், நாமாக வலிய முன் வந்து, ஏசாயாவைப் போல, இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்று சொல்லி வேலை செய்யும் மனப்பாங்கைப் பெற்றிருக்கிறோமா என்று நம்மிடம் எதிர் பார்க்கிறார். தேவனுடைய ராஜ்ஜியமாகிய சபையிலே நம் எல்லோரும் செய்யக்கூடிய வேலைகள் நிறைய உள்ளன. ஒரு வேளை திறமைகளில் ஒருவருக்கொருவர் மாறுபட்டிருந்தாலும் நாம் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வேலைகள் நிறையவே உள்ளது. தேவையானது என்ன வென்றால், செய்ய வேண்டும் என்ற விருப்பம் நமக்குள் இருக்க வேண்டும்.

சரி, நாம் செய்யவேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்ப் பதில் முதலாவது காரியம், ஆவிக்குரிய காரியங்களில் ஒரு வளர்ச்சி.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, ஏதோ இது பெண் களுக்கான வேலையாக இல்லையே என்று நினைக்கத் தோன்றலாம். அநேக சமயங்களில், அடுத்தவர்களின் தேவைகளில் மிகவும் கவனமாக உதவி செய்துவிட்டு நம்முடைய சொந்த ஆவிக்குரிய வளர்ச்சியில் கவனம் செலுத்தாமல் அலட்சியம் செய்து விடுகிறோம். பெண்களின் வேலை ஒருபோதும் செய்து முடிக்கப்படாதது என்று சொல்வது உண்மை தான். சுத்தம் செய்வது, துணிகளை பாதுகாப்பது, உணவுப் பொருள் வாங்குவது, சமைப்பது, கணவன், பிள்ளைகள் என்று கவனம் முழுவதும் அவர்களுக்காகச் செலுத்துவது என்று நேரத்தை செலவு செய்து விட்டு, நமக்காக வேதம் வாசித்து, ஜெபம் பண்ணி, வசனத்தை தியானிப்பது

போன்ற மிக முக்கியமான காரியங்களுக்கு நேரமும் இருக்காது, பெலனும் இருக்காது. இப்பேர்ப்பட்ட நேரங்களில் தான் நாம் எதற்கு முன்னுரிமை கொடுக்கிறோம் என்ற கேள்வி எழுகிறது. இது நியாயமான ஒன்றுதான்.

நியாயமும், நீதியும் தேவனுக்கே சொந்தமான ஒன்றாக இருப்ப தால் இதைக் குறித்து அவர் என்ன வெளிப்படுத்தியிருக்கிறார் என்று பார்ப்போம். நாம் அனைவரும் அறிந்திருக்கும் மார்த்தாள், மரியாள் சம்பவத்தில் (லூக்கா *10:38 42*) மார்த்தாள் இயேசுவைத்தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள். அவள் சகோதரி மரியாள் இயேசுவின் பாதத் தருகே உட்கார்ந்து வசனத்தை கேட்டுக் கொண்டிருந்தாள். இயேசு மார்த்தாளைப் பார்த்து, மார்த்தாளே, மார்த்தாளே நீ அநேக காரியங் களை குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே; மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்று சொல்கிறார். அப்படியானால் யாரையுமே வீட்டிலே ஏற்றுக் கொண்டு அவர்களுடைய தேவைகளை சந்திக்கக் கூடாது என்பது அர்த்தமா? கட்டாயமாக இல்லை. ஏனென்றால் மத்: *20:27* ல் உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாக இருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் என்று நமதாண்டவரும், அருமை இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். காரியம் என்னவென்றால, சரீரத் தேவைகளுக்காகவே நம் முழு நேரத்தையும் செலவு செய்துவிட்டு ஆவிக்குரிய காரியங்களை அப்படியே ஒதுக்கிவிடுகிறோம். வீடு, வாகனம், ஆடைகள், பூமிக்குரிய சொத்து இவையெல்லாம் நம்மை விட்டு கடந்து சென்று விடும். ஆனால், நம்முடைய ஆத்துமாவும், மற்றவர்களின் ஆத்துமாவும் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும். (மத்தேயு *6 :33*).

நாம் எப்படி ஆவிக்குரிய ரீதியிலே வளர்வது? நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்க மில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1 பேதுரு : 2 : 3) அப்போஸ்தலனாகிய பவுல், தெசலோனிக்கேயர்களுக்கு எழுதுகிற போது உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும் (1 தெச 1:3) என்று பாராட்டுகிறார். இதைப் பற்றி பேதுரு ஆசிரியர் இயேசு கிறிஸ்து வின் கிருபையினாலும் அவரை அறிகிற அறிவினாலும் வளருங்கள். (2 பேதுரு 3:18) என்று கூறுகிறார். நம் சரீரம் வளர்ந்து, முதிர்ச்சியடைந்து பின்பு தேய்ந்து விடுகிறது. ஆவிக்குரிய வளர்ச்சி என்பது தொடர்ந்து தொடரக்கூடிய ஒன்று. பவுல் கொரிந்து பட்டணத்தில் உள்ள கிறிஸ்துவின் சபை விசுவாசிகளுக்கு கூறும்போது ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான

மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது என்கிறார். (2 கொரி 4 : 16). ஆகவே, வளர்ச்சி அவசியம்.

இரண்டாவதாக தேவன் நாம் கற்றுக்கொடுப்பவராக (ஆசிரியர்) இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

நம் முன்னுதாரணத்தின் மூலமோ அல்லது நம் வாழ்க்கையின் மூலமோ நாம் அனைவரும் ஓர் ஆசிரியையாகவே இருக்கிறோம். மனைவிகளாகிய நாம் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோம். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடத்தையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். (1 பேதுரு 3 : 1 2) என்று வாசிக்கிறோம். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது என்று இயேசு கிறிஸ்து மத்தேயு 5 : 16 ல் கூறுகிறார். ஒருவேளை நம் வாழ்க்கையைப் பார்த்து சுவிசேஷத்திற்கு ஒருவர் கீழ்ப்படிந்தாலும், தேவனுடைய வார்த்தையே தெளிவையும், இரட்சிப்பையும் கொடுக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷமே அதை விசுவாசிக்கிற யாருக்கும் இரட்சிப்பு உண்டாக தேவ பெலனாயிருக்கிறது (ரோமர் 1:16) என்று வாசிக்கிறோம்.

கற்றுக் கொடுக்கிற வேலை அவ்வளவு முக்கியமானதா என்றால், ஆம் முக்கியமானது தான். ஏனென்றால், முதலாவதாக போதிக்க வேண்டுமென்பது தேவனுடைய கட்டளை. உலகமெங்கும் போய் போதிக்க வேண்டும் என்று சீடர்களுக்கு கட்டளையாக கொடுத்திருக்கிறார். (மத்:28:18 20). எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே. ஆகையால், பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான். (யோவான் 6:45). நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்...(1 கொரி. 3:910). என்று வாசிக்கிறோம். அப். பவுல் தீத்துவுக்கு எழுதும் போது, முதிர் வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீகளுக்கு போதிக்கிறவர்களாயிருக்க வேண்டும் (தீத்து. 2 : 3,5) என்று எழுதியிருக்கிறார்.

பழைய ஏற்பாட்டிலும் பார்க்கும்போது போதித்தல் பற்றிய காரியங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உபா. 4 :9; 6:7,9). வசனங்களை வாசித்துப் பார்க்கும்படியாய் அன்போடு உங்களை கேட்டுக் கொள்கிறேன். இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்திலே போதிக்கும் போது கற்பனைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவன், பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னைப்படுவான் (மத். 5:19) என்று மிகவும் அழகாக,

சரியாக சொல்லியிருக்கிறார். வளர்ச்சியின் ஓர் அடையாளம் போதனை. நம்மில் அநேகர் ஆவிக்குரிய வாழ்வில் பல வருடங்களை கழித்திருந்தாலும் இன்னும் பிறருக்கு கற்றுக் கொடுப்பதில் தயக்கம் காட்டுகிறோம். இதையே ஆவியானவர் எபிரெயர் ஆசிரியர் மூலமாக கூறும்போது, *காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல; பாலை உண்ணத் தக்கவர்களானீர்கள்.* (எபி. 5 : 12) என்கிறார். எந்த வகுப்பாக இருந்தாலும் ஓர் ஆசிரியர் தான் மிக அதிகமாக கற்றுக் கொள்கிறார்.

ஒருவர் கற்றுக் கொடுக்கும் வேலையை செய்யும்போது அது அவரை அதிகமாக கற்க தூண்டுவதோடு, படிப்பதற்கு சரியான நோக்கத்தையும் கொடுக்கத் தூண்டுகிறது.

ஆக, அருமையான சகோதரிகளே, தேவன் இவ்வருடம் நம்மிடம் விரும்பும் இரண்டு காரியங்களான ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் பிறருக்கு கற்றுக் கொடுப்பது பற்றி வேத வசனங்களின் துணை கொண்டு பார்த்தோம். நாம் இந்த இரண்டு காரியங்களையும் செய்து தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவோம். எப்படி செய்வது என்று வேத வசனங்கள் நமக்கு போதிக்கிறது. அதைப் படித்து, ஜெபித்து, தியானித்து நான் என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி கேட்டு, வசனம் சொல்கிறபடி செயல்படுவோம். தேவன் அதற்கு உதவி செய்வார்!! ஆமென்!.

## நாளும், நடப்பும்

1. பழநி – பொள்ளாச்சி ரயில் பாதையில் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சேவை தொடங்கப்பட்டிருக்கிறது.
2. இந்தாண்டிற்கான முதல் போலியோ சொட்டு மருந்து முகாம் இம்மாதம் 18 ஆம் தேதியும் நடைபெறும்.
3. மதுரை மாவட்டத்தில் ஐ.ஏ.எஸ் அதிகாரி சகாயம் கிரானைட் குவாரிகளில் நேரில் ஆய்வு.
4. இலங்கையின் புதிய அதிபராக மைத்ரிபால சீறிசேனா தேர்வு.
5. பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் பத்திரிக்கை அலுவலகத்தில் தீவிரவாத தாக்குதலில் 12 பேர் சாவு
6. இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியா கைப்பற்றியது.

வாலிபர் பகுதி

# புதிய ஆண்டு புதிய ஆசை

**Bro. பென்னி மார்ட்டின்**

**வா**லிபர்களாகிய உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசுவின் நல்நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை இப் புதிய ஆண்டில் இக்கட்டுரை வாயிலாக சந்திப்பதில் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாகவே, நாமெல்லாரும் தேவன் நமக்கு ஒவ்வொரு வருடத்தைத் தரும்போது, அடுத்த வருடத்தையும் நாம் காணும்படி அவர் நமக்கு ஜீவனைத்தர வேண்டும் என்று வாஞ்சிக்கிறோம், ஏங்குகிறோம். வேறுவிதமாகச் சொன்னால் நாம் இவ்வுலகில் அதிக நாட்கள் வாழ ஆசைப்படுகிறோம். அப்படி ஜீவனை விரும்பி, நல்ல நாட்களை காண வேண்டுமென்றி ருப்பதை வேதாகமம் தவறு என்றோ, அல்லது பாவம் என்றோ கூறு வதில்லை. மாறாக, அதற்கென்று தேவனால் கட்டளையிடப்பட்டி ருக்கிற காரியங்களைச் செய்ய வேண்டுமென்றே வலியுறுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பேதுரு இதைப்பற்றிச் சொல்லும் போது, " ஜீவனை விரும்பி, நல்ல நாட்களை காண வேண்டு மென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்கு தன் உதடு களையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடரக்கடவன் " என்று புத்தி சொல்கிறார் *(1 பேதுரு 3:10,11)*.

இன்று நாம் உலகத்தைச் சற்று உற்றுப் பார்த்தால் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத ஓர் நிலைதான் காணப்படுகிறது. உலகில் எந்த ஓர் இடத்தையும் பாதுகாப்பானதாகப் பத்திரமானதாக, பார்க்க முடிவதில்லை. நாட்கள் நகர நகர நம்மைப் பதற வைக்கும் பல சம்பவங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இப்படிப் பட்ட சூழ்நிலையில் தேவன் நம்மைப் பராமரித்து, பாதுகாத்து நம் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு வருடத்தை ஈவாகக் கொடுத்திருக் கிறார். அவருக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். சரி, இப்போது (1 பேதுரு *3:10,11)* வசனங்களில் வெளிப்படுத்தியிருக்கிற கவனத்தைக் கவரும் இவ்வாக்கியத்தை கவனித்து கூடுதலான தகவல்களுக்காக அதை ஆராய்ச்சி செய்யாமல் யார் தான் கடந்து செல்ல முடியும்? வேறுவிதமாகச் சொன்னால், அதிக நாட்கள் வாழ யார் தான் விரும்பு வதில்லை? நல்ல நாட்களை யார் தான் எதிர்நோக்கு வதில்லை? இப்பாழாய்ப்போன உலகில் பெரும்பாலும் நாம்

பலவிதமான பாடுகளைப் படுகிறோம். பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்படுகிறோம், அவைகளின் வழியாய் கடந்து போகிறோம். பிரியமானவர்களே! இன்றைய நாட்களில் வாலிபர்கள் வயதானவர்கள் என்று எல்லாருமே ஆயுசு நாட்களை அதிகரிக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறார்கள். சமச்சீரான உணவு, உடற்பயிற்சி, தூக்கம் என்று எல்லாவற்றிலும் கவனம் செலுத்தினாலும் கவலை என்னும் அழையா விருந்தாளி அதிக ஆயுசு நாட்கள் என்னும் கனவைக் கலைத்து விடுகிறது. அப்படியென்றால், ஆயுசு நாட்களை அதிகப்படுத்துவதற்கு என்னத்தான் வழி என்னும் மாபெரும் கேள்விக்கு தீர்வாய், அருமருந்தாய் அமைவது தான் *1* பேதுரு *3:10,11* வசனங்கள்.

## I வாழ்வை விரும்புதல்

இவ்வுலகில் பலர் வாழ்க்கையை விரும்பாமல் இருப்பது துரதிஷ்டவசமானது. வருடந்தோறும் லட்சக்கணக்கான மக்கள் தற்கொலையினால் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள். மற்றவர்கள் அந்த அளவுக்கு போகாவிட்டாலும் கூட வாழ்க்கையை வெறுத்தவர்களாய், மகிழ்ச்சியற்றவர்களாய் வாழ்ந்து கொண்டிருப்பதை நம்மால் காணமுடியும். இதில் வேதனைப்பட வேண்டிய, வெட்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், வாழ்க்கையே வெறுத்து விட்டது என்று சொல்கிற கூட்டத்தில் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களும் இருக்கிறார்கள் என்பதுதான். இப்போது நாம் வாழ்வை அல்லது ஜீவனை விரும்ப எவைகள் காரணிகளாக அமைகின்றன அல்லது எவைகள் நம்மை ஊக்கப்படுத்துகின்றன என்று பார்ப்போம்.

முதலாவது, நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் (ஆதி. *1:27*) அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (அப். *17:28*). ஆகவே, நாம் ஜீவனை விரும்ப முடியும்.

இரண்டாவது, நம் கண்ணீரைத் துடைக்க, நம்மை விசாரிக்க (1 பேதுரு *5:7*). நம் ஜெபங்களுக்கு பதில் கொடுக்க தேவன் இருப்பதால் ஜீவனை விரும்ப முடியும்.

மூன்றாவது, நாம் மரணத்தைத் தழுவும்போது கூட ஜீவனை விரும்ப முடியும். ஏனென்றால், நம் சரீரம் ஒரு விதையைப்போல் மண்ணில் விதைக்கப்பட்டு, கண்ணீரல்லாத, கவலையில்லாத தேசத்தில் (வெளி. *21:4*). நம் ஜனத்தாரோடே சேர்க்கப்படும் அந்த நாளை எதிர் நோக்க முடியும் (ஆதி. *25:8*).

எனவே, பிரியமான வாலிபர்களே! நான் ஏன் இந்தப் பூமியில் பிறந்தோம் என்று வாழ்க்கையே வெறுத்தவர்களாய் நாம் பேசாமல் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஜீவனை எண்ணி, வாழ்க்கையின்

ஒவ்வொரு நொடியையும் ரசித்து, ருசித்து கர்த்தருக்குள் வாழ கற்றுக் கொள்ள வேண்டும். தேவனுக்கு உடையவைகளாகிய நாம் நம் சரீரத்தினாலும், நம் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் (1 கொரிந்தியர் 6:20). பூமிக்குரிய கூடாரமாகிய நம் சரீரம் அழிந்து போனாலும், பரலோகத்தில் நமக்கு நித்திய வீடு உண்டு என்பதை உணர்ந்தவர்களாய் வாழ கற்றுக்கொள்ள வேண்டும் (2 கொரி. 5:12).

## II நல்ல நாட்களைக் காணுதல்

நல்ல நாட்கள் என்றால் என்ன? கெட்ட நாட்கள் என்றால் என்ன? பல வாலிபர்கள் வெளிப்புற சூழ்நிலைகளை அளவு கோலாக எடுத்துக்கொண்டு இது நல்ல நாள், இது கெட்ட நாள் என்று தீர்மானித்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, அவர்கள் வாழ்க்கையில் எதையாவது சாதித்து விட்டாலோ, புதிய உயரங்களைத் தொட்டாலோ அல்லது செழிப்பான காலங்கள் வந்தாலோ அவைகளை நல்ல நாட்களென்றும், பொருளாதார மந்த நிலையில் இருக்கும் போதோ, வியாதியால் அவதிப்படும் போதோ அந்த நாட்களை கெட்ட நாட்களென்றும் வெளிப் புறமான சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்தே நாட்களைக் காண்கிறார்கள்.

ஆனால், நாம் வேதாகமத்தில் பார்க்கும் போது பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட போது கூட நடு இராத்திரியிலே அவர்கள் ஜெபம் பண்ணி, சந்தோஷமாய் தேவனை எப்படித் துதித்துப் பாடினார்கள்? (அப்போஸ்தலர்கள் 16:25). எப்படி அவர்களால் அப்படி செய்ய முடிந்தது? பவுலுக்கும், சீலாவுக்கும் அது நல்ல நாளாகத்தான் இருந்திருக்கிறது. நமக்கு இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் அது வாழ்க்கையிலேயே மிகவும் மோசமான அல்லது கெட்ட நாள் என்று முத்திரை குத்தியிருப்போம். எனவே, மகிழ்ச்சியான நல்ல நாட்களைத் தீர்மானிப்பது வெளிப்புறமான சூழ்நிலைகள் அல்ல, நம் மன நிலைதான். தேவன் தரும் எல்லா நாட்களையும் நாம் நல்ல நாட்களாகவே எடுத்துக்கொண்டு அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். எந்த ஒரு மனிதனும் நரகத்தில் ஒரு நாளைக் கழிக்கும் வரை உண்மை யாகவே கெட்ட நாள் வாழ்க்கையில் எது என்பதை அறிந்து கொள்ள மாட்டான்.

## III தீர்வு

தேவதாசனாகிய பேதுரு ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்விக்குத் தீர்வாக கொடுத்திருக்கிற வேத வாக்கியம் என்னும் அருமருந்தை நாம் பயன்படுத்த வேண்டும். முதலாவது, ஒரு மனிதன் பொல்லாப்புக்குத்தன் நாவை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும்

என்று சொல்கிறார். நாவு என்பது ஒரு சிறிய உறுப்பாக இருந்து கொண்டு எந்த ஒரு பெரிய மனிதனையும் கட்டுப்படுத்தி விடுகிறது (யாக்கோபு *3:5,8*). அது அடங்காததும், பொல்லாங்குள்ளதும் தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களில் மூன்றைக் கொண்ட தாகவும் இருக்கிறது. அதாவது, நாவு சம்மந்தமாக இருக்கிறது பொய் நாவு, அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி, சகோதரக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் போன்றவைகளாகும் (நீதி. *6:17,19*). இது மட்டுமல்லாமல் பெருமை, முகஸ்துதி, வம்பளப்பு தவறான தகவல், அவதூறு போன்ற காரியங்களிலும் நாவின் பங்களிப்பு அதிகமாயிருக்கிறது.

அடுத்ததாக, ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்ய வேண்டும். பலர், அதிலும் குறிப்பாக நாங்களும் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட இந்த அடிப்படை உண்மையை புரிந்து கொள்ளச் சிரமப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. நாம் நன்மையானவைகளை சக மனிதர்களுக்குச் செய்யும் போது, தேவனிடத்திலிருந்து நன்மைகளை எதிர்பார்க்க முடியும். கடைசியாக, பேதுரு ஆசிரியர் ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் சமாதானத்தைத் தேடி அதைப்பின் தொடரக் கடவன் என்று சொல்கிறான். இன்று, பலர் சண்டை பண்ணுகிறவர்களாக, அதையே பொழுதுபோக்காக கொண்டிருப்பவர்களாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்களிடம் சமாதானம் என்பது ஒரு பேச்சுக்குக் கூட இருக்காது. ஆனால், நாம் சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடர வேண்டுமென்று தேவனால் கட்டளையிடப் பட்டிருக்கிறோம்.

பிரியமான வாலிபக் கண்மணிகளே! நம்மெல்லோருக்கும் இவ்வுலகில் அதிக நாட்கள் வாழ வேண்டுமென்றும், வாழும் போது நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றும் தணியாத ஆசை இருக்கும். அவைகளை நமதுடையதாக்கிக் கொள்ள எத்தனையோ சரீர முயற்சிகளை எடுக்கிறோம். சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது என்று தேவன் சொல்கிறபடியால் *1* தீமோத் *4:8*. சரீர முயற்சியை விட்டு விட்டு, பொல்லாப்புக்கு நம் நாவையும், கபடத்துக்கு நம் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின் தொடரும்போது, தேவன் நம் ஆயுசு நாட்களை பெருகச்செய்வார், வரும் உலகத்திலும் நல்ல நாட்களை காணும் பாக்கியத்தை நமக்கு தருவார்.

சிறுவர் பகுதி

# வேதாகமம் தேவனுடைய வெளிப்பாடு

**அ**ன்பான சிறு உள்ளங்களே! உங்கள் அனைவருக்கும் 2015ம் ஆண்டிற்கான வாழ்த்துதல்களையும், ஸ்தோத்திரங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாதம் வேதாகமம் பற்றிய சில விசேஷித்த உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

உலகில் உள்ள எல்லா புத்தகங்களைக் காட்டிலும் வேதாகமத்தை வேறுபடுத்திக் காட்டுவது எது? வேதாகமம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டது. தேவன் எதை மனிதர்களாகிய நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணினாரோ அதை பல்வேறுபட்ட நபர்களைக் கொண்டு எழுதினார் (2தீமோ. *3:16-17*) தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2பேதுரு *1:21*).

வேதாகமத்தை யாரும் எந்தக் காலத்திலும் குற்றம் கண்டு பிடிக்கவே முடியாது. எப்போது பரிசோதித்துப் பார்த்தாலும் அது "பாஸ் மார்க்" தான் எடுக்கும்.

சரித்திரம், விஞ்ஞானம், மருத்துவம், தொல்பொருள் ஆராய்ச்சி இப்படி எல்லா வகையிலும் சோதித்துப் பார்த்தாலும் எல்லா உண்மைகளுக்கும் ஆதாரம், அதாவது ஆரம்பம் வேதாகமம் தான்.

இனி இம்மாதம் விஞ்ஞான ரீதியில் மருத்துவத்திற்கும், வேதாகமம் ஆதாரமாக இருக்கிறது என்று பார்ப்போம். வேதாகமத்தில் கூறப்பட்டவைகளை கொண்டுதான் மருத்துவதுறை தன் கண்டுபிடிப்புகளை ஆரம்பித்தது என்பதற்கு ஒரு சிறு உதாரணத்தை உங்கள் முன் ஆணித்தரமாக வைக்க ஆசைப்படுகிறேன்.

இஸ்ரவேல் மக்களை நோக்கி மோசே கூறுகிறார், மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது (லேவி. *17:11-14*) என்று. மோசே சரியாகச் சொன்னார். ஏனென்றால், சிவப்பணுக்கள் தான் உயிருக்கு வேண்டிய ஆக்ஸிஜனை உடல் முழுவதும் எடுத்துச் செல்லுகிறது. ஒவ்வொரு சிவப்பணுவும் ஹீமோகுளோபின் என்ற சிவப்பு நிறமிகளால் ஆக்கப்பட்டுள்ளது. சொல்லப்போனால் ஒரு சிவப்பணுவில் சுமார் 27,0,000,000 ஹீமோகுளோபின் மூலக்கூறுகள் உள்ளன. இதில் குறைபாடு வரும்போது உயிர் வாழ்வது ஆபத்தாகி விடுகிறது. ஆக, இப்போது நமக்கு புரிகிறது மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்று.

ஆதி. *17:12*ல் கர்த்தர் ஆபிரகாமிடம் புதியதாக பிறக்கும் எல்லா ஆண் பிள்ளைகளும் எட்டாம் நாளில் விருத்த சேதனம் பண்ணப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார். ஏன் எட்டாம் நாள்? மனித உடலில் இரத்தம் உறைதல் என்ற நிகழ்ச்சி மூன்று முக்கிய காரணி

களை உள்ளடக்கியுள்ளது. 1. பிளேட்லெட்ஸ், 2. வைட்டமின் K. 3. புரோத்ரோம்பின். இந்த புரோத்ரோம்பின் உருவாக வைட்டமின் K. காரணமாக இருக்கிறது. வைட்டமின் K. வின் அளவு கொஞ்சம் பற்றாக்குறையாக இருந்தால் புரோத்ரோமின் பற்றக்குறையும் ஏற்பட்டு அங்கே இரத்தக்கசிவு ஏற்படும் நிலை வந்துவிடுகிறது.

ஆச்சரியம் என்னவென்றால், பிறந்த குழந்தையின் 5 முதல் 7 நாளுக்குள் தான் போதிய அளவு வைட்டமின் K உற்பத்தியாகிறது. குழந்தையின் குடல் பகுதிகளில் உள்ள ஒரு பாக்டீரியாவின் செயல் பாட்டினால் இந்த புரோத்ரோம்பின் உற்பத்தியாகிறது. இந்த வைட்டமின் K புரோத்ரோம்பினுடன் இணைந்து இரத்தம் உறைதல் என்ற நிகழ்ச்சியை நடத்துகிறது. எந்தவொரு அறுவை சிகிச்சைக்கும் இந்த இரத்தம் உறைதல் அவசியம். எனவே, எந்தவொரு அறுவை சிகிச்சையும் குழந்தையின் 5-7 நாளைக்கும் செய்யாமல் அதற்குமேல் தான் செய்ய வேண்டும் என்பது இப்போது நமக்கு நன்றாக விளங்கு கிறது. ஏன் தேவன் எட்டாம் நாள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்?. எட்டாம் நாளில் புரோத்ரோம்பின் அளவு நார்மலாக இருப்பதை விட 100 சதவீகிதம் உயர்த்தப்படுகிறது. எனவே உண்மை என்னவெனில் ஒரு ஆண் குழந்தையின் வாழ்க்கையில் எட்டாம் நாள் என்ற ஒரே ஒரு நாளில் மட்டும் தான் இந்த நிலை காணப்படுகிறது. எனவே அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றால் எட்டாம் நாள் மிகவும் பொருத்த மான நாள். எனவே தான், தேவன் எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ண வேண் டும் என்று கட்டளையிட்டார்.

அருமையான தம்பிகளே! தங்கைகளே! நம் தேவன் எல்லா காலத்தையும் அறிந்தவர். அவர் காலங்களின் தேவன். விஞ்ஞானத் திற்கும் அவர் தேவன். மருத்துவம், சரித்திரம், வானம், பூமி ஆழங்கள் எல்லாவற்றிற்கும் அவர் தேவன்.

அப்பேர்ப்பட்ட தேவன் அருளிய வேத எழுத்துக்கள் எல்லாம் அர்த்தமுள்ளதாய் இருக்கிறது. ஜீவனுள்ளது, நம்பக்கூடியது, மாறாதது, பிழைப்பைக் கொடுக்கிறது. வாழ்க்கையில் மனிதனின் மரணம். மரணத்திற்குப்பின் ஒரு வாழ்வு இதுபற்றிப் போதிக்கிறது. பாவத்தினால் பிரிந்த போன மனிதன் மீண்டும் தேவனோடு ஐக்கியமாவதற்கு மீட்பின் திட்டத்தை தேவன் கொடுத்திருக்கிறார்.

தம் ஒரே குமாரனை நமக்குக் கொடுத்து நமக்காக மரிக்க வைத்து உயிரோடு எழ வைத்திருக்கிறார். இச்சிறுவயதிலிருந்தே வேத வசனங் களுக்கு பயந்து நடப்போம். கிறிஸ்துவின் உபதேசமாகிய புதிய ஏற்பாட்டு உபதேசத்தை வாசியுங்கள், தியானியுங்கள். உங்கள் பெற்றோரோடு சேர்ந்து, புதிய ஏற்பாட்டு உபதேசத்தை பின்பற்றும் சபையாகிய கிறிஸ்துவின் சபையை தேடிக்கண்டுபிடித்து அங்கு செல்லுங்கள். வேத வசனம் தான் நமக்கு வழிகாட்டி. இதுதான் நமக்கு நியாயாதிபதி.

எனவே 2015ம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் உள்ளங்களே, வேதத்தை தினமும் வாசியுங்கள். வேத வசனங்கள் தேவனு டைய ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அதை அற்பமாய் எண்ணா திருங்கள். புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# 2015 நம்பிக்கை

**நம்பிக்கை** : 2015-ம் வருடத்தின் எனது ஒற்றை வார்த்தை.

**நம்பிக்கை** : விசாலமானது, பொதுவானது. எதையும், எல்லாவற்றையும் உள்ளடக்கியது.

**நம்பிக்கை** : குறிப்பானது... என் சிறிய கனவு போன்று விரிவானது. எளிமையான இலக்கு போன்றது.

**நம்பிக்கை** : முகத்திற்கு மகிழ்ச்சியைத்தரும் இரகசிய மூலப் பொருள். யதார்த்த நிலை என் கனவுகளுக்கு மாறுபட்டு இருந்தாலும். எளிமையான இலக்கு போன்றது.

**நம்பிக்கை** : எனக்கு சொல்லுகிறது : இன்றைய நாளை நான் எப்படி அணுகுகிறேன் என்பதைப் பொறுத்து நாளைய தினத்தை மாற்ற முடியும் என்று.

**நம்பிக்கை** : எனக்கு நினைவூட்டுகிறது : வாழ்க்கை எப்படிப் போகுமென்று யாருக்கும் தெரியாது. எதிர்பாராததை எதிர்பார் என்று.

**நம்பிக்கை** : எனக்கு அடித்துச் சொல்லுகிறது : நம்மால் காண முடியாத, நம் கட்டுப்பாட்டில் இல்லாதவைகள் வாழ்க்கையில் நடக்கும். நல்லவைகளைக் கொண்டு வருபவைகளை முன்கூட்டியே கணிக்க முடிவதில்லை என்று.

**நம்பிக்கை** : தன் பாட்டை என்னிடம் பாடுகிறது. அந்தப் பாட்டை மட்டும் என்னால் கேட்க முடிகிறது. இரவு நேரங்களிலும், புயலடிக்கும் நேரங்களிலும் அதைக் கேட்க முடிகிறது.

**நம்பிக்கை** : வேறு எதுவும் கை கூடி வராத போது, **நம்பிக்கை** தன் வேலையைச் செய்வதை என்னால் பார்க்க முடிகிறது.

**நம்பிக்கை** : எனக்கு ஊக்கம் வெகுவாகத் தேவைப்படும் போது நம்பிக்கை என்னை அந்த இடத்திற்கு தூக்கிச் செல்லுகிறது.

**நம்பிக்கை** : வாழ்க்கையின் அளவுக்குப் பெரியது, சவால்களை சமாளிக்கும் பலம் வாய்ந்தது; நட்சத்திரங்களைப் போல் மின்னக் கூடியது; என் இருதய விருப்பத்திற்கேதுவானது. அதுதான் 2015-க்கான என் ஒற்றை வார்த்தை.

நீங்கள் ஒவ்வொருவரும் இந்த வருடத்திற்கான வார்த்தையைக் கண்டுபிடிப்பீர்களாக. வரும் டிசம்பர் 31 வரை உங்களைக் கூட்டிச் செய்வதற்கான உந்துதலைப் பெற்றுக் கொள்வீர்களாக. உங்கள் வருடத்திற்கான, வெற்றிக்கான **நம்பிக்கை** இதோ – சிறப்பாக வாழ்ந்த வாழ்க்கையிடமிருந்து இதற்கான பொருள் வருகிறது.

**Sis. Sheila**

**Daughter of Sis. Betty & J.C. Choate**

# புத்தாண்டு தீர்மானம்

**Bro. K. PANDIAN, Pondicherry**

எனக்கன்பான தேவபிள்ளைகளே! உங்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த உலக வழக்கப்படி அநேகர் வருட பிறப்பன்று. சில தீர்மானங்களை எடுப்பது நாம் அறிந்ததே. பொதுவாக தங்களிடம் இருக்கும் கெடட பழக்க, வழக்கங்களை அதாவது புகைப்பிடித்தல், குடிப்பழக்கம் போன்ற காரியங்களை விட்டு விடுவதாக தீர்மானம் எடுத்துக் கொள்வார்கள். அதில் வெற்றி பெற முடியாமல் திண்டாடுபவர்கள் பலர். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நமக்குத் தீர்மானிக்க வேண்டிய சில காரியங்கள் உண்டு என்று வேதம் போதிக்கின்றது. அவை எவைகள் என்று இக்கட்டுரை வாயிலாகக் காண தேவன் கிருபை செய்வாராக.

இயேசு ஆண்டவர் தம் உபதேசத்தை மதியாத இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து இவ்விதமாகக் கூறுவதை கவனியுங்கள். மாயக்காரரே பூமியின், வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே! இந்தக் காலத்தையே நிதானியாமற் போகிறதென்ன? நியாயம் இன்னதென்று நீங்களே தீர்மானியாமல் இருக்கிறதென்ன? (லூக்கா 12:57) மனிதனுக்கு காலத்தை, பக்திமார்க்கங்களின் உண்மையான நிலையை நிதானித்து அறியக்கூடிய புத்தியை தேவன் கொடுத்திருக்கிறார். எதையும் கட்டாயப்படுத்தி மனுக்குலத்திடம் திணிக்கும் படியாக தேவன் விரும்பவில்லை. தீர்மானம் எடுக்கும் உரிமையை மனிதனிடமே கொடுத்துவிட்டார். நன்மை - தீமை இரண்டையும் அவனுக்குத் தெரியப்படுத்தி அவன் சீர்கெடாமலிருக்க நன்மையை தெரித்து கொள்ளும்படி அவனை வழி நடத்துகிறார் (உபா. 30:19,20 மீகா 6:8) தன்பிள்ளைகள் நல்ல நிலைமையில் இருக்க வேண்டும் என்று பிரியப்படும் ஒரு தகப்பனைப் போல் செயல்படும் தேவனின் அன்பை நாம் புரிந்துகொள்வோமாக.

வேதத்தில் தவறான தீர்மானம் எடுத்து வேதனையில் சிக்கித் தவித்த சிலரை கவனிப்போம்:

ஆபிரகாமோடே இருந்த லோத்து தங்கள் மந்தையின் பெருக்கத்தினால் பிரிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது, சுயநல சிந்தையோடே செழிப்பா சமவெளியைத் தீர்மானித்துக் கொண்டு பிரிந்தான். ஆனால், அவ்விடத்து மக்கள் அக்கிரமத்தாரராய் நடந்து கொண்டார்கள். எனவே, லோத்தின் மனநிம்மதி இழந்து போனது. (2 பேதுரு 2:8) ஆக ஒரு மனிதனுக்கு வெறும் பொருளாதாரா செழிப்பு மட்டும் நிம்மதி தந்து விடாது என்ற தெளித்த தீர்மானம் எடுப்போமாக. அடுத்து

யாக்கோபின் சகோதரன் ஏசா என்பவன் தன் குடும்பத்தில் மற்றும் சமுதாயத்தில் கிடைத்திருக்க வேண்டிய முக்கிய மரியாதையை ஒரு வேளை உணவுக்காக விட்டு விடத்தீர்மானித்தான். பிற்பாடு அவன் கண்ணீர் விட்டு கவலையோடே முயற்சி செய்தும் பலனில்லாமல் போனது (எபி. 12:16, 17) எனவே, சூழ்நிலையின் நெருக்கடியிலும் நாம் அவசரப்படாமல் தேவக்கிருபையில் நம்பிக்கை வைத்து நிதானமா யிருக்கத் தீர்மானிப்போமாக.

இஸ்ரவேல் தேசத்தின் முதல் ராஜா சவுல் போரில் வெற்றி பெற்ற பின் தேவனுக்கு விரோதமான இடத்திலிருந்து ஆடு, மாடுகளை கொண்டு வந்து நம் தேவனுக்கு பலியிடத் துணிந்தான். ஆனால் அச்செய்கையால் அவன் ராஜ்ஜிய உரிமை அவனை விட்டு நீங்கிப் போனது (1 சாமு 15:22) எனக்கன்பானவர்களே தவறான வழியிலிருந்து வரும் காணிக்கையை தேவன் அங்கீகரிப்பதில்லை என்பதை தீர்மானிப் போம். அதே வண்ணமாய் உசியா ராஜா மேட்டிமையால் ஆசாரியர் செய்ய வேண்டிய தூபங்காட்டும் பணியை தான் எடுத்துக் கொண்ட போது குஷ்டரோகம் தோன்றி அவதிப்பட்டான் (2 நாளா 26:16) ஒரு சிலர் திருமண விட்டில் மாப்பிள்ளையாகவும், சாவு வீட்டில் பிண மாகவும் இருக்க ஆசைப்படுவார்கள். ஆனால், தேவனுடைய வீட்டில் சத்தியத்திற்கே முதலிடம் கொடுக்க வேண்டும். 1 தீமோ. 3:15. ஆகவே, நாம் கிறிஸ்துவின் சிந்தை ஆகிய தாழ்மையை அணிந்து கொள்ளத் தீர்மானிப்போம். உலகத்தில் தலைசிறந்த ஞானி சாலமோன் பெண்ணாசை கொண்டு அந்நிய தெய்வங்களை வணங்க வேண்டிய பாவத்திற்கு தள்ளப்பட்டான் (1 ராஜா 11:11) ஆகவே, கல்வி மட்டும் ஒருவனை அறிவாளியாக்காது. தேவபக்தியே பிரயோஜனமானது என்று தீர்மானிப்போமாக. அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படக்கூடாது என்ற அப்போஸ்தல உபதேசத்தில் நிலைத்திருப்போம்.

அடுத்து, சாலமோனுடைய மகன் ரெகோபெயாம் முதியோர் ஆலோசனையைத் தள்ளி, வாலிபர்களின் ஆலோசனையில் நடக்கத் தீர்மானத்த போது ஒற்றுமையாய் இருந்த பெரிய தேசம் இரண்டாகப் பிரிந்து தேவனைவிட்டு விலக ஏதுவானது (1 ராஜா 12:13). எனவே, தேவ சித்தப்படி நம் குடும்பங்களில், சமுதாயத்தில், சபைகளில் முதியோர் களை அசட்டை செய்யலாகாது என்று தீர்மானம் எடுப்போம்.

மாறாக, நல்லதீர்மானம் எடுத்த வேதாகமத்தின் சாட்சிகள் சிலரை கவனிப்போமாக. நகோமியின் இரண்டு மருமகள்களை அவள் அனுப்பத் தீர்மானித்த போது ரூத் தன் மாமியை விட்டுப் பிரியா திருக்கும் தீர்மானத்தை எடுத்தாள் (ரூத். 1:15). புறஜாதி பெண்ணான அவள் உண்மை தேவனை வணங்கும் தனது மாமியைத் தெரித்து கொண்டு தன் உறவில், திருமண வாழ்க்கையைப் புறக்கணித்தபடியால் பிற்பாடு

கிறிஸ்துவின் சந்தப் பட்டியலில் இடம் பிடிக்கும் பாக்கியத்தைப் பெற்றாள் (மத்தேயு 1:5) கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேற சில நேரத்தில் அவன் வீட்டார சத்துருக்களாய் இருக்கலாம். இயேசு சொன்னார். தன் தாயையாவது, தகப்பனையாவது, மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல (மத் 10:36-38). ஆகவே, நம் சரீரப்பிரகார உறவினர்களை விட சபைக்கு (கிறிஸ்துவின் சரீரம்) அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தீர்மானிப்போமாக, அடுத்து கானான் தேசத்தை வேவு பார்த்து திரும்பிய எல்லோரும் ஜனங்களின் இருதயத்தைக் கரையப்பண்ணினபோது காலேப்- யோசுவா ஆகிய இருவர் மட்டும் தேவனை உத்தமமாய் பின்பற்ற தீர்மானித்தார்கள் எண் 32:11. நாமும் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்து, சூழ்நிலைகளின் பயத்தைப் புறம்பேத்தள்ளி, அவ நம்பிக்கையான வார்த்தைகள் நம் வாயில் வராமல் பார்த்துக் கொள்வோம். பிரச்சனையில் சோர்ந்து போய் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்காதிருக்கத் தீர்மானம் எடுப்போமாக (1 கொரி. 10:10).

யூதா ராஜாவாகிய ஆசாவின் காலத்தில் ராஜாவும், ஜனங்களும் சேர்ந்து அனைவரும் கர்த்தரைத் தேட வேண்டும் என்ற தீர்மானம் செய்து, தேடாதவன் கொலை செய்யப்பட வேண்டும் என்று ஆணை யிட்டுக் கொண்டார்கள். (2 நாளா 15:14). அதுபோல் நாமும் இனி நம் வாழ்வில் தேவனுடைய ராஜ்ஜியமாகிய சபை கூடுதலுக்கு முதலிடம் கொடுக்கவும், சபைக் கூடிவருதலை விட்டுவிடாதிருக்கவும் இன்றே தீர்மானம் எடுப்போமாக. மோசேயைப் போல, அநித்தியமான பாவ சந்தோஷங்களையும், எகிப்தின் பொக்கிஷங்களையும் பெரிதாக எண்ணாமல் தேவ ஜனங்களையும், கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தை யையும் பாக்கியமாக எண்ணுவோம். மார்த்தாளின் சகோதரி மரியாளைப் போல தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டு நம் எஜமான் இயேசுவைப் பின்பற்றத் தீர்மானிப்போம். கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்!

## வேதாகமத்தில் சில நாற்பதுகள்

1. நோவாவின் நாட்களில் இரவும் பகலும் நாற்பது நாட்கள் மழை பெய்தது (ஆதி. 7:4)
2. இஸ்ரவேல் ஜனங்கள் நாற்பது வருடங்கள் மன்னாவைப் புசித்தார்கள் (யாத். 16:35)
3. மோசே அந்த சீனாய் மலையில் இரவும் பகலும் நாற்பது தேவனோடு இருந்தார் (யாத். 24:18)
4. தேவன் இஸ்ரவேலர்களை நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் அலையும்படி செய்தார் (எண்ணா 14:33,34)

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

Bro. J.H. ஜேம்ஸ் ராஜ்குமார் - சென்னை

திருமறை ஆசான் மாதாந்திர பத்திரிக்கை வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன். இந்த கிறிஸ்து என்னும் மார்க்கம் என்கிற தொடர் கட்டுரையை எழுதுவதற்கு வாய்ப்பளித்த பரலோகத்தின் தேவனுக்கு நான் நன்றி சொல்லிக் கொள்ளுகிறேன்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் மதம் என்னும் மயக்கத்திலே தன்னை மூழ்கடித்துக் கொண்டிருக்கிற மனிதனை அந்த மயக்கத்தி லிருந்து வெளியே கொண்டு வந்து தெய்வீக மார்க்கத்திலே இணைய உற்சாகப்படுத்துவது ஆகும். மதம் மதியீனமான மயக்கமாக ஒருவனுக்குள் இருந்தால் அவனை அதிலிருந்து வெளியே கொண்டு வருவது அரிதான காரியமாய் அமையலாம். ஆகையால், நம்முடைய முயற்சியை தேவன் ஆசீர்வதிக்க வேண்டும். மதுவிலிருந்தும், மயக்கும் மங்கையின் மடியிலிருந்தும் கூட ஒருவனை விரைவாக மீட்டுவிடலாம். ஆனால், மதம் என்கிற மயக்கத்திலிருந்து மீட்பது கடினம். ஏனென்றால், இதற்கு புனிதம் என்கிற சாயம் பூசப்படுகிறது மற்றும் தெய்வீக சாயல் என்கிற சாந்தும் இடப்படுகிறது. ஆகையால், தான் நிற்கிற இடம் அதாவது தன் நம்பிக்கை சரியானதே என்று அதில் மூழ்கிக் கிடக்கிறான்.

ஒருவன் இறைவன் மேல் பக்தியாயிருப்பது நல்ல விஷயம். ஆனால், அதை அறிவுப்பூர்வமாக அணுக வேண்டும் என்று வேதம் கூறுகிறது. *"சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமாயிருக்கிறது. தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக் குறித்துச் சாட்சி சொல்லு கிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படி யென்றால், அவர்கள் தேவ நீதியை (மார்க்கத்தை) அறியாமல், தங்கள் சுய நீதியை (தங்கள் வழியை அதாவது மதத்தை) நிலைநிறுத்தத் தேடு கிறபடியால் தேவ நீதிக்கு (மார்க்கத்திற்கு) கீழ்படியாதிருக்கிறார்கள்" (ரோமர் 10:1-3).*


தேவன் மார்க்கத்தை ஏற்படுத்தினார். ஆனால், மாம்சத்தின்படி இஸ்ரவேலர்களோ நியாயப்பிரமாண சடங்குகள் பாரம்பரியங்கள், மனித கற்பனைகள், சொந்த விருப்பங்கள் போன்றவற்றிற்கு முக்கியத் துவம் கொடுத்து விட்டு தேவனுடைய சட்டங்கள், நியாயங்களுக்கு

ஐந்தாவது அல்லது ஆறாவது இடம் அளித்தார்கள். அல்லது அதற்கு முக்கியத்துவமே கொடுக்காமல் உடன்படிக்கை பெட்டியிலே மாத்திரம் அதை வைத்து வைத்தார்கள். ஆதலால், அவர்கள் தங்களை அறியாமலேயே மார்க்கத்தில் இல்லாமல் மதத்தில் இருந்தார்கள். இதைக் குறித்து இயேசுவானவர் கூறும்போது, " *உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்குகிறீர்கள்* ". (மத்தேயு 15:6). அவர்களுடைய பாரம்பரியத்தின் மேல் அவர்களுக்கு இருந்த வைராக்கியத்தினால் என்ன நடந்தது என்பதையும் இயேசுவானவர் குறிப்பிடுகிறார். " *நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்* " என்கிறார் (மத்தேயு 15:3). இப்பொழுது நமக்கு ஒரு காரியம் தெளிவாகிறது. தேவன் மார்க்கத்தை ஏற்படுத்தினார். மனிதன் தன் சுயமாக மதத்தை உருவாக்கினான்.

மதம் தவறு என்று கிறிஸ்து சொன்னதால் அவருக்கு இந்த உலகம் கொடுத்த பட்டம் பைத்தியக்காரன் என்பது. " *அவர்களில் அநேகர்; இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன்; ஏன் இவனுக்குச் செவி கொடுக்கிறீர்கள் என்றார்கள்* " (யோவான் 10:20). இன்றைக்குங் கூட ஒருவனை மதம் என்கிற மயக்கத்திலிருந்து தெளிவடைந்து விழித்துக் கொள் என்று சொல்பவன் இந்த உலகத்தால் பைத்தியக்காரன் என்கிற பெயர் சூட்டப்படுவான்.

மதம் என்பது : மனிதன் தன்னுடைய விருப்பங்களையும், வாழ்க்கையின் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள இறைவனை தன்பக்கம் இழுக்கும் முயற்சியில் ஈடுபடுகிறான். இறைவன் இறங்கி தன் பக்கம் வர கட்டாயப்படுத்துகிறான். அவன் தன் அறியாமையினால் அது நடந்து விட்டதாக பெருமைப்பட்டுக் கொள்கிறான். இது உலகத்தின் மிகப்பெரிய கொடுமை.

ஆனால், மார்க்கம் என்பது : இறைவனை அவர் நமக்கு உண்டாக் கியிருக்கும் வழியைத் தேடி அவரைச் சென்றடையும் அறிவைப் பெற்று அந்த வழியில் நடந்து, தெய்வம் இருக்கிற இடத்திற்கு நாம் சென்று சேர்வது ஆகும். இறைவனோ அல்லது அவர் வாழும் நிலமோ பூமியில் இல்லை என்கிற உண்மையை முதலாவது நாம் அறிய வேண்டும்.




சிலர் ரோமிலே (Rome) தங்கள் தலைமையிடம் இருப்பதாக சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட மாலையைத் தொடுக்கிறார்கள் என்றால்; கனவிலே கானல் நீரை பாலைவனத்தில் பாய்ச்சி பயிரிடப்பட்ட மலர்களை, காற்றை நூலாக்கித் தொடுத்த மாலை எப்படியிருக்குமோ அப்படித்தான்; ஒன்றுமில்லாதது.

நாம் இவைகளைவிட்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வானவர் ஜெபித்த போது சொன்னார். "ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று (யோவான் 17:3). நித்திய ஜீவனைப்பெறும்படி ஒன்றான மெய் தேவனையும், அதாவது 17:2ன் படி பிதாவையும், அவர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் முதலாவது அறிந்து கொள்ள வேண்டும். (கிறிஸ்துவை 1 யோவான் 5:20-ல் மெய்யான தேவன் என்று சொல்லப் பட்டுள்ளது அதை பிறகு ஆராயலாம் அல்லது விளக்கலாம்) இப்பொழுது ஒன்றான மெய் தேவனாகிய பிதாவைப் பற்றி கவனிக்கலாம்.

அநேகர் இப்படி எண்ணுகிறார்கள்: தேவன் ஒருவரே; அந்த ஒருவர் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியாகவும் முப் பரிமாணங்களாக உள்ளார் என்கிறார்கள். இதற்கு தண்ணீரை உதாரண மாக பயன்படுத்துகிறார்கள். ஒரே தண்ணீர் திரவ நிலையிலும், உறையும் போது திண் நிலையிலும், கொதிக்க வைக்கும் போது ஆவியாகவும் ஆவது போல ஒரே நபர் மூன்று நிலைகளிலே இருக்கிறார் அல்லது மாறுகிறார் என்கிறார்கள். முதலாவது இவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, தேவன் தண்ணீரல்ல "அவர் தேவன்" என்பதை இவர்கள் உணர வேண்டும். மேலும், இந்த விளக்கம் வேதாகமத்தில் இல்லை, தெய்வீகத்தை விளங்கிக் கொள்ள அதாவது பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி விளங்கிக் கொள்ள பரிசுத்த ஆவியானவர் தண்ணீரை உதாரணமாக பயன்படுத்தவில்லை.

தமிழ் வேதத்தில் " தேவன் " என்னும் வார்த்தையும், ஆங்கிலத்தில் " God " என்னும் வார்த்தையும் தேவனைக் குறிப்பதற்கு பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்த வார்த்தை மூல பாஷையான எபிரெய மொழியில் எவ்வாறு எழுதப்பட்டுள்ளது அல்லது பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பொருள் என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆதியாகமம் 1:1-ல் " ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் ". இந்த வசனத்தை நாம் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்கிறோம். அவர்களும் அழகான மழலைத் தமிழில் சொல்லுவதைக் கண்டு நாம் ரசிக்கிறோம். இந்த வசனத்தில் பயன் படுத்தப்பட்டுள்ள " தேவன் " என்கிற வார்த்தை மூல பாஷையான எபிரெய மொழியிலே "ஏலோயீம்" (ELOHIYM) என்ற வார்த்தை எழுதப் பட்டுள்ளது. இந்த வார்த்தையை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதும் எபிரெய மொழி வேதாகம வார்த்தைகள் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த வார்த்தையை நாம் எலோயீம் (EL-0-HEEM) என்று உச்சரிக்க வேண்டும். இந்த வார்த்தை எபிரெய மொழி வேதத்தின் வார்த்தைகள் அட்டவணையில் (அகாரதியில்) 430-ம் எண் வார்த்தை. இந்த வார்த்தை பன்மை (Plural) வார்த்தை, அதவாது ஒன்றுக்கும் மேற்பட்டவர்களைக் குறிக்கும் வார்த்தை. பழைய ஏற்பாடு என்று

சொல்லக்கூடிய மக்களால் தொகுத்து வைக்கப்பட்டுள்ள நாம் பயன்படுத்தக்கூடிய ஆதியாகமம் முதல் மல்கியாவரை உள்ள 39 புத்தகங்களில் அதிகமான இடங்களில் இந்த "எலோயீம்" என்ற வார்த்தை தான் எழுதப்பட்டுள்ளது.

இந்த ஏலோயீம் என்ற வார்த்தைக்கு அடுத்தபடியாக பயன் படுத்தப்பட்டுள்ள "EL", இதை "ele" வார்த்தை என்று அழைக்க வேண்டும். இந்த ஏலீ என்பது சுருக்கமாக அழைப்பது முழுமையாக அழைக்க வேண்டுமானால் "Eliyam" (ay-lee-yaw) என்று சொல்ல வேண்டும். இன்றைக்கும் கூட தமிழில் தேவன், கடவுள் என்கிற வார்த்தைகளை தங்கள் பெயர்களாக வைத்துக் கொள்வதைப் போல், ஏலீ, எலியா என்ற தேவனை குறிப்பிடும் வார்த்தையை தங்கள் பெயர்களாக வைத்திருந் தார்கள். விசேஷமாக ஏலி என்பவர் 1 சாமுவேல் புத்தகம் 1,2 அதிகாரங் களில் ஆசாரியராகவும், நியாயாதிபதியாகவும் இருந்தார். அதேபோல் எலியா என்பவர் பழைய ஏற்பாட்டு காலத்தில் "ஆகாப்" ராஜாவின் நாட்களில் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியாக இருந்தார். இந்த வார்த்தை "ஒருமை" அதாவது ஒருவரை மட்டும் குறிக்கும் வார்த்தை. ஆகையால் தான், இயேசுவானவர் சிலுவையில் தம் பிதாவை கூப்பிடும் போது "ஏலீ, ஏலீ! " என்று கூப்பிட்டார். அவர் "ஏலோயீம்! ஏலோயீம்" என்று கூப்பிட வில்லை. இந்த வார்த்தை எபிரெய மொழி வேதாகம வார்த்தை அகராதியில் 410-ம் எண்ணுள்ள வார்த்தை.

இந்த 410-ம் எண்ணுள்ள "ஏலீ" என்ற ஒருமை வார்த்தை எபிரெய மொழி வேதத்தில் குறைவான இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆதியாகமம் 14:18-ல் உன்னதமான தேவன் என்று சொல்லப்பட்டுள்ள இடத்திலே வேதத்தில் முதன்முதலாவதாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆதியாகமம் புத்தகத்தில் 13-அதிகாரங்கள் வரை "ஏலோஹீம்" என்ற பன்மை வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்தது "yehovah" யெகோவா என்னும் வார்த்தை இதை நாம் Yeh-ho-vaw என்று உச்சரிக்க வேண்டும் இந்த வார்த்தை ஆதியாகமம் 6-5-ல் முதலாவதாக எழுதப்பட்டுள்ளது. இந்த யெகோவா என்ற வார்த்தை கர்த்தர் என்று தமிழ் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்த வார்த்தை எபிரெய மொழி வேதாகம வார்த்தை அகராதியில் 3068-ம் எண்ணுள்ள வார்த்தை. இதோடு 3069-ல் எண்ணுள்ள வார்த்தை சற்று உச்சரிப்பு மாறி வருகிறது. இது "yehovih" ஆகும் இதை "ye-ho-vee" யாவீ என்று உச்சரிக்க வேண்டும். இந்த வித்தியாசங்கள் எபிரெய மொழியாளர் களுக்கு நன்றாக தெரிந்திருந்தது. இந்த வார்த்தை தமிழ் வேதாகமத்தில் ஆதியாகமம் 15:2-ல் முதலாவதாக வருகிறது. இதற்குப் பெரும்பாலான இடங்களில் "கர்த்தராகிய ஆண்டவர் " என்று எழுதப்பட்டுள்ளது. மேலும் 3068-ம் எண்ணுள்ள " யெகோவா " என்ற வார்த்தையும் யாத்தி


ராகமம் 23:17-ல் "கர்த்தராகிய ஆண்டவர் " என்று உள்ளது. இப்படி தேவன் பழைய ஏற்பாட்டு காலத்தில் எபிரெய மொழியில் " ஏலீ யெகோவா " என்று அழைக்கப்பட்டுள்ளார்.


இதில் யெகோவா என்ற வார்த்தை மிகவும் சொற்பமான இடங்களில் எழுதப்பட்டுள்ளது. இந்த வார்த்தை "கர்த்தர்" கர்த்தராகிய ஆண்டவர் என்று தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. வேதத்தில் பெரும்பாலான இடங்களில் எழுதப்பட்டுள்ளது. "ஏலோயீம்" என்னும் பன்மை வார்த்தை தான். மொழிபெயர்ப்பாளர்கள் "ஏலீ", "ஏலோயீம்" என்ற இரண்டு வார்த்தைகளுக்கும் தேவன் என்று தான் மொழி பெயர்த்துள்ளனர். ஆங்கிலத்திலும் "God" என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார்கள். ஆனால், "ஏலோயீம்" என்றால் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் என்று அர்த்தம். இதிலிருந்து நாம் சொல்ல வருவது என்னவென்றால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பவர்கள் ஒரே நபர் அல்ல மூவர். இவர்கள் மூவரையும் சொல்லும் போது எபிரெய மொழியில் "ஏலோயீம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆதியிலே "தேவன்" வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்று சொல்லும் போது, அதின் உண்மையான அர்த்தம் ஆதியிலே தேவன் (பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரும்) வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தார் (சிருஷ்டித்தனர்) என்பது மெய்யான பொருள் ஆகும். நான் ஏன் வானங்களையும் என்று குறிப்பிட்டேன் என்றால், மூல பாஷையிலே பன்மையிலே "வானங்கள்" என்று தான் எழுதப் பட்டுள்ளது. இதை ஆங்கிலத்திலே "Heavens" என்கிற பன்மை வார்த்தை தான் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆங்கில வேதத்தில் கவனிக்கலாம்.


ஏன் நாம் இதை இவ்வளவு விரிவாக கவனிக்க வேண்டியுள்ளது. "ஒன்றான மெய் தேவனாகிய " உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று இயேசுவானவர் சொன்னார். இன்றைய கால கட்டத்தில் மட்டுமல்ல அநேக ஆண்டு களாக அநேகர் இயேசுதான் பிதா, இதே இயேசு தான் பரிசுத்த ஆவியானவர். ஒருவரே பிதாவாக பரலோகத்தில் இருந்தார். இயேசுவாக பூலோகத்தில் மனிதனாக அவரே வந்தார். உயிர்த்தெழுந்து பரலோகம் சென்று பரிசுத்த ஆவியானவராக மீண்டும் வந்தார் என்று சொல்லுகிற படியால் இந்த விளக்கங்கள் தேவைப்படுகிறது.


*1* யோவான் *5:7*-ல் சொல்லப்பட்ட பிதா, வார்த்தை (இயேசு), பரிசுத்த ஆவி என்பவர்களாகிய மூவரும் ஒரே நபர் அல்ல, இம்மூன்று நபர்களும் தெய்வீகத்தில் அதாவது "தேவத்துவத்தில்" ஒன்றாயிருக் கிறார்கள் என்பது பொருள் அதாவது அர்த்தம் ஆகும். இதுதான் "ஏலோயீம்" என்ற வார்த்தையின் அர்த்தம் ஆகும். இன்னும் தொடர் வோம். பிதாவாகிய தேவன் தாமே உங்களை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஆசீர்வதிப்பாராக!.


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.
















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin in Tamil On Tamilan TV
**Monday 7:00 - 7:15 am**
**Thursday 9:30 - 10:00 pm**
**Saturday 7:15 - 7:30 am**




Arjunan In Tamil
**TV : Every Monday 6:00 - 6:15 am and**
**Every Saturday 6:15 - 6:30pm on Tamilan TV**
**Radio : Every Saturday 5:30- 5:45 pm on Sri Lanka Radio**

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
**Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on**
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam:
**Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV**

Philemon & Kingsley in Tamil:
**Tamilan Tv : Sunday 6:45 - 7:00 pm**
**Friday 6:00 - 6:30 am**



P.R. Swamy & Douglas:
**Every Sunday to Wednesday At 5:30 - 5:45 pm**
**on 25 And 49 Meter bend of Sri Lankan Radio**


Joshua & Ricky Gootam In Telugu:
**Every Saturday at 6:00 pm Subhavartha Channel**
**Every Wednesday at 6:30 pm on Rakshana Channel**
**Every Thursday at 11:00 am on Rakshana Channel**
**Satyavani T.V. online : www.sakthitv.in**
**Every Wednesday & Friday at 8.00 pm**


Thang Lien in Manipur:
**Hornbill Cable, Channel No.1**
**6:00 - 7:00 pm, Sunday, Tuesday, Thursday, Saturday.**


For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
**@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,**
**Arasaradi, Madurai - 625016**
**9244204420 / 21, 0452 - 2607026**


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**


# எங்களது இதர வெளியீடுகள்











சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam.